லக்ஷ்மணர் சீதையைத் தேற்றியபடி.

யிருக்கிறான். சுந்தரீ "என்னைக் காப்பாற்று" என்ற இந்தச் சத்தம் பயமடைந்த ராக்ஷசன் ஒருவனால் இடப்பட்டிருக்கவேண்டும். ஏழைப்பெண்போல நீர் நடத்தல் கூடாது. துயரத்தை விட்டுவிடும்; சிறிதும் கலங்கவேண்டாம். இம்மூவுலகத்திலும் இராமரைப் போர்முகத்தில் வெல்லத்தருந்தவர் ஒருவரும் இல்லை; இனிப் பிறக்கப்போகிறதுமில்லை. இந்திரனோடு கூடிய தேவர்களாலும் இராமர் அபஜயமடைவதில்லை" என்றேன். இப்படி நான் சொல்லவும் சீதை புத்திமயங்கிக் கண்ணீர் விட்டுக்கொண்டு என்னைநோக்கி "நீ உன் தமையனார் இறந்துபோக என்னை அடையலாம் என்ற கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறாய். அவர் துணைக்காகப் பெரும் கூச்சலிடவும் நீ அவரிடம் போகாமையால் நீ பரதனோடு சங்கேதம் பண்ணிக்கொண்டு இராமரைத் தொடர்ந்துவந்திருக்கிறாய்.

சீதை லக்ஷ்மணரைக் கூறிய கடுஞ்சொல்.

நீ மாறுவேஷம் பூண்ட சத்துரு. எனக்காக இராமரைப் பின்தொடர்ந்து அவருடைய குறைகளைத் தெரிந்துகொள்ளுகிறாய். ஆகையாற்றான் நீ அவருக்கு உதவிசெய்யப்போகின்றாயில்லை" என்று இக்கொடிய மொழிகளைச் சொன்னாள். இவ்வாறு சீதை சொல்ல நான் கோபத்தால் கண்கள் சிவந்து உதடுகள் துடிக்க ஆசிரமத்தை விட்டு ஓடிவந்தேன்" என்றார். இவ்வாறு லக்ஷ்மணர் சொல்ல, இராமர் அதிக துயரத்தால் அறிவுமயங்கி அவரைப்பார்த்து "தம்பி, நீ அவளை விட்டிட்டு வந்தது குற்றம். அரக்கர்களால் என்னை வெல்லமுடியாது என்பதை நன்றாக அறிந்திருந்தும் சீதை கோபமாகச் சொன்னதைக் கேட்டு நீ ஆச்சிரமத்தைவிட்டுப் புறப்பட்டு வந்தாய். கோபத்தினால் அவள் சொன்னதைக் கேட்டு அவளைத் தனியாக விட்டு வந்ததைப்பற்றி உன்னிடத்தில் எனக்குத் திருப்தி இல்லை.

இராமர் லக்ஷ்மணர் செய்தது குற்றமெனல்.

சீதையின் சொல்லால் ஏவப்பட்டுச் சினங்கொண்டு நானிட்ட கட்டளையைக் காப்பாற்றாதது எவ்வகையானும் குற்றம். மான் உருவங்கொண்டு என்னை ஆச்சிரமத்திலிருந்து வெகுதூரம் இழுத்துச்சென்ற அரக்கன் இப்பொழுது என் அம்பால் அடியுண்டு மாண்டு கிடக்கிறான். நான் என் வில்லைச் சிறிது வளைத்து அதில் அம்பைப் பூட்டி அவனை எய்தபொழுது அவன் மான் உருவம் நீங்கிக் கேயூரமணிந்த அரக்கனாகிப் பரிதாபமாகக் கதறினன். என் பாணம் அவன்மேல் தைத்ததும் அவன் வெகுதூரம் கேட்கும்படியாக என் குரலைக்கொண்டு அவ்வாறு கொடிய துன்பந்தரும் சொற்களைச் சொல்லிக் கூப்பிட்டான். அவற்றை நீ கேட்டுச் சீதையைவிட்டு என்னைத் தேடி வந்தாய்" என்று சொன்னார்.

அறுபதாஞ் சருக்கம்.

இராமர் சீதையைத் தேடித் துக்கப்படுதல்

இராமர் ஆச்சிரமத்தை நோக்கிச் செல்லும்போது அவருக்கு இடக்கண் துடித்தது; கால் தடுமாறிற்று; தேகம் முழுதும் நடுங்கிற்று. இவ்வாறு அடிக்கடி உண்டாகும் அபசகுனங்களைப் பார்த்து அவர் லக்ஷ்மணரை நோக்கிச் "சீதை க்ஷேமமா" என்று பன்முறை கேட்டார். இராமர் சீதையைப் பார்க்கவேண்டுமென்று வெகு வேகமாகச் சென்று ஆச்சிரமம் வெறிதாக இருக்கக் கண்டு மனம் கலங்கினார். அவர் கைகால்களை உதறிக்கொண்டு வேகமாய்ப் பர்ணசாலையை முழுதும் சுற்றிப் பார்த்தார். பர்ணசாலை சீதை இன்றிப் பனிக்காலத்தில் தாமரைப்பூக்களில்லாத தடாகம்போல அழகற்றிருந்தது.

இராமர் ஆச்சிரமத்தில் சீதையைக் காணாது வருந்தல்.

தமது ஆச்சிரமம் வெறுமையாயும், மரங்கள் அழுவன போன்றும், புஷ்பங்கள் வாடியும், மிருகங்களும் பறவைகளும் வாட்டமுற்றும், அழகு நீங்கியும், வனதேவதைகள் பிரிந்தும், மான்றோல்களும் தருப்பைகளும் சிதறுண்டும், முனிவர் வீற்றிருக்கு மாசனங்கள தலைகீழாகத் தள்ளப் பட்டும் எல்லாம் அலங்கோலமாக இருக்கக கண்டு இராமர் அடிக்கடி "சீதையை யாராவது எடுத்துக்கொண்டு போய்விட்டார்களா? அல்லது அவள் இறந்துவிட்டாளா? அல்லது அவளை யாராவது புசித்துவிட்டார்களா? அல்லது அவள் பயந்து எங்கேயாவது ஒளித்துவிட்டாளா? அல்லது காட்டுக்குச் சென்றிருக்கிறாளா? அல்லது புஷ்பங்களும் பழங்களும் பறிக்கப போயிருக்கிறாளா? அல்லது தண்ணீர் கொண்டுவரக குளத்துக்குப் போனாளா? அல்லது ஆற்றுக்குச் சென்றுவிட்டாளா" என்று புலம்பினர். பலவிடங்களிலும் நன்றாகத் தேடிபபார்த்தும் இராமர் சீதையைக் காணவில்லை. அவர் துக்கத்தால் கண்கள் சிவந்து வெறிபிடித்தவாபோலக் காணப் பட்டார். ஒருமரத்தி னருகிலிருந்து மற்றொரு மரத்துக் கோடியும் ஒருமலையிலிருநது மறறொரு மலைக்குச் சென்றும் ஒரு நதியிலிருந்து மற்றொரு நதிக்குப்போயும் இராமர் புலம்பிககொண்டு துக்கசாகரத்தில் மூழ்கினர். "ஓ கடம்பே, கடம்ப வனத்தில் ஆசையுள்ள சீதையை நீ கண்டதுண்டா? கண்டதுண்டாயின் தயைகூர்ந்து எனக்குச் சொல்லு. ஓ வில்வமரமே, இளந்தளிருக்கொப்பான மஞ்சள் பட்டுடுத்தவளும் வில்வப பழததிறகொப்பான தனங்களை யுடையவளுமான சீதையை நீ கண்டதுண்டா? சொல்லு. ஓ மருதமரமே, உன்னிடம் அவள் அதிக அன்புள்ளவ ளாயிற்றே! மெல்லிய இயலையுடைய ஜானகி உயிருடனிருக்கிறாளா? சொல்லு. ககுபமே, ககுபத்திற்கு

இராமர் சீதையைக் காணாது புலம்பல்.

மரங்களை வினவல்.

ஒப்பான துடையையுடைய சீதையை உனக்கு நன்றாகத் தெரியும். இந்தக் காட்டுக்கு அரசன்போலத் துளிர்களும், புஷ்பங்களும் நிறைந்து, கொடிகளால் மூடப்பட்டு வண்டுகள் பாட விளங்குகின்றது இந்தத் திலகம். இதற்குச் சீதையிருக்குமிடம் அவசியம் தெரிந்திருக்கவேண்டும். ஓ அசோகமே, நீ சோகத்தைப்போக்குபவனுயிற்றே? எனது பிராணநாயகியை எனக்குக் காட்டி எனது சோகத்தை நீக்கி உன்னுடைய பெயரை மெய்ப்படுத்து. ஓ பனைமரமே, உனக்குக் கருணை உண்டாயின் பனம்பழத்திற்கொப்பான கொங்கைகளையுடைய என் மனைவியை நீ பார்த்ததுண்டா? சொல். ஓ நாவன்மரமே, நாவற்பழத்துக் கொப்பான பளபளப்பான மேனியையுடைய என் மனைவியை நீ கண்டதுண்டாயின் பயமின்றிச் சொல். ஓ கோங்கமே, இன்று அநேக புஷ்பங்களைப் பூத்து வெகு அழகாக விளங்குகின்றனை; கோங்கமலரில் ஆசையுள்ள என் மனைவியை நீ கண்டதுண்டோ? சொல்" என்று இவ்விதமாக மா, வேம்பு, ஆச்சா, பலா, மருதோன்றி, தேவம், மாதுளை, மல்லிகை, மாதவி, சம்பகம், தாழை முதலிய ஒவ்வொரு மரத்தையும் கிட்டி அவைகளை யெல்லாம் சீதையைப்பற்றி விசாரித்துக்கொண்டு அவ்வரணியத்தில் பைத்தியம்பிடித்தவர்போல இராமர் அலைந்து திரிந்தார். பின்பு அவர் விலங்கினங்களை விசாரிப்பாராயினர்.

மான்களை விநவல.

"ஓ மானே, மான்போல் விழியினளாகிய சீதை போன விடம் உனக்குத் தெரியுமா? அவள் மான்களுடன் கூடி விளையாடுகின்றாளா? ஓ யானையே, உனது துதிக்கைபோன்ற துடையையுடைய ஜானகி போன இடம் உனக்குத் தெரியவேண்டும். அவளை நீ கண்டாயா? சொல். புலியே, பூர்ணசந்திரன்போன்ற முகத்தையுடைய என்னுடைய காதலி மைதிலியை நீ கண்டாயாயின் என்னிட மஞ்சாமல் சொல். தாமரை மலருக் கொப்பான கண்களை யுடையா

ளே, காதலீ, நீ ஏன் ஓடுகிறாய்? நான் உன்னைக் கண்டு கொண்டேன். ஏன் மரத்தின் பின்னால் மறைந்து கொண்டு என்னிடம் வார்த்தையாடாது நிற்கின்றாய்? பொறு, பொறு, மாதே, என்மேல் உனக்குக் கருணை யில்லை. முன் ஒருபோதும் நீ இவ்வாறு பரிகாசம் பண்ணினதில்லை. இப்போது ஏன் நீ என்னை உபேட்சை செய்கிறாய்? சுந்தரீ, நீ எவ்வாறு மறைந்துகொண் டோடினாலும் உனது மஞ்சள் பட்டாடை உன்னைக் காட்டிவிடுகிறது. என்மேல் உனக்கு அன்பு உண்டாயின் நீ ஓடாமல் நில். ஓ இனிய நகையுடையாளே, நீ சீதையன்று போலும். உண்மையாய நீ கொல்லப்பட்டுவிட்டாய். இல்லையாயின் இந்தச் சமயத்தில் என்னை நீ உபேட்சை செய்யமாட்டாய். நான் இல்லாத சமயத்தில் வந்து பிசித ஆணர்களாகிய அரக்கர்கள் அவளுடைய அவயவங்களைக் கிழித்து அவளைப் புசித்துவிட்டார்கள் என்பது நிச்சயம். அழகிய பற்களும் அழகிய மூக்கும் உடையதாய் வெள்ளைக் குண்டலங்க ளணிந்து விளங்கும் பூர்ண சந்திரன்போன்ற அவள் முகம் அரக்கர்கள் கையில் அகப்பட்டுக்கொண்ட போது ஒளிகுன்றி வெளுத்துப்போ யிருக்கும். அவள் கழுத்துச் சம்பகப்பூவின் நிறமுடையதாய் மாலை யணிந்திருந்தது. அதனை அவள் கதறக்கதற அரக்கர்கள் புசித்திருப்பார்கள். தளிர்போன்ற பல்வகை வளைகளணிந்த, அழகமைந்த கைகளை அவள் பயத்தால் நடுநடுங்கி உதற உதற அரக்கர்கள் புசித்திருப்பார்கள். ஐயோ! அரக்கர்கள் புசிப்பதற்காகவா நான் அவளைத் தனியாக விட்டுப்போனேன்? அநேக பந்துமித்திரர்கள் இருந்தும் அநாதைபோல் அவள் அரக்கர்களால் புசிக்கப்பட்டாளே. ஓ பெருங்கைகளுள்ள லக்ஷ்மணா, என் காதலியை எங்குளாள் என்று நீ கண்டாயா? நாயகீ, சீதாய், நீ எங்கே போனாய்" என்று இவ்வாறு புலம்பிக்கொண்டு இராமர் ஒரு காட்டினின்று மற்றொரு காட்டுக்குச் சென்றும், ஒரு

வேளை வேகமாய் ஓடியும், ஒருவேளை விரைவாய் நடந்தும், பைத்தியம் கொண்டவர்போல் பலவாறலைந்து ஒரு நிமிஷம் நின்றவிடத்தில் மற்றொரு நிமிஷம் நிற்காமல் வனங்கள், ஆறுகள், மலைகள், அருவிகள் முதலிய விடங்களெல்லாம் சென்று தேடி மைதிலியை ஓரிடமுங் காணமல் பின்னும் அவளை வெகு கஷ்டத்தோடு தேடக் கருதினர்.

அறுபத்தொன்றுஞ்சருக்கம்.

இராமர் சீதையை நினைந்து புலம்பல.

தசரதகுமாரரான இராமா ஆச்சிரமமும் பர்ணசாலையும் வெறிதாயிருப்பதையும், அவ்விடத்துப் போடப்பட்டிருந்த ஆசனங்கள் சிதறுண்டிருப்பதையும் கண்டு நான்குபக்கமும் பார்த்துச் சீதையை எங்கும் காணாராகிக் கையைத் தூக்கிக்கொண்டு புலம்பத் தொடங்கினர்:—

இராமர் லக்ஷ்மணரை வினவுதல்.

"ஓ லக்ஷ்மணு, சீதை எங்கே? அவளிவ்விடம்விட்டு எங்கே போய்விட்டாள்? ஓ சுமித்திரை குமார, என் காதலியை யார் தூக்கிப்போயினர்? அன்றி யார் புசித்துவிட்டார். ஓ சீதாய், நீ மரங்களில் மறைந்துகொண்டு என்னைப் பரிகாசம்பண்ணக் கருதுவது போதும்; துக்கத்தினுல் வருந்தும் என்னை வந்து தேற்றுதல் செய். ஓ சீதாய், உன்னுடைய அன்புள்ள இந்தச் சிறு மான்கள் உன்னைக் காணுமல் கண்ணீர் விட்டு விசாரங்கொண்டிருக்கின்றன. ஓ லக்ஷ்மணு, சீதையின்றி நான் பிழைத்திருக்க மாட்டேன். சீதை கவரப்பட்டமையால் என்னைப் பெருந்துக்கம் பற்றிக்கொண்டது. இனிப் பரலோகத்தில் என் தந்தை நிச்சயமாக என்னைக்கண்டு 'நான் உன்னை என் வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற நியமித்திருக்க, நீ அதை

முடித்துவைக்காமல் எவ்விதமாக இவ்விடம் வந்தாய்? சீ, நீ கெட்டாய்' என்று சொல்வார். உண்மையாக எனது தந்தையார் என்னுடைய பொறுமை யில்லாத கெட்ட பொய் நடக்கையைக்குறித்து இவ்வாறு கூறுவார். நான் என்னிலே கெட்டு என் ஆசைகள் ஒன்றும் கைகூடாமல் துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றேன். மெல்லிய இடையையுடைய சீதாய், கொடியவனைப் புகழ் கைவிடுவதுபோல நீ என்னைத் தனியாகவிட்டு எங்கு ஓடிவிட்டாய்? உன்னை அடையேனாயின் நான் என் பிராணனை விட்டுவிடுவேன்."

இவ்வண்ணம் இராமர் சீதையைக் குறித்துப் பலவாறு புலம்பி எங்குந் தேடிப்பார்த்தும் அவளைக் கண்டுகொள்ளவில்லை. சீதையின் பொருட்டுத் துக்கத்தில் முழுகிச் சேற்றில் ஆழ்ந்த யானைபோல் இராமர் மெலிவடைந்தார். லக்ஷ்மணர் இராமரைப் பார்த்து அவருடைய நன்மைக்காக "ஐயா, மிக்க பராக்கிரமம் பொருந்தியவரே, துக்கப்படவேண்டாம். நாமிருவரும் இன்னும் தேடிப்பார்ப்போம். அந்தப் பெரியமலை அநேக குகைகளை உடையது. சீதை காட்டில் உலாவுகிறதில் ஆவல்கொண்டவள்; புஷ்பித்த மரங்களைக்கண்டு களிப்பவள். அவள் இக்காட்டில் எங்கேயாவது சென்றிருக்கலாம்; அல்லது பூக்கள் நிறைந்த தாமரை யோடைக்குப் போயிருக்கலாம். அவள் மீன்களும் நீர் நொச்சிகளும் நிறைந்த ஆற்றண்டை சென்றிருப்பாள். அல்லது நமக்கு அச்சமுண்டாக்கி நாம் எவ்வாறு அவளைத் தேடிப்பிடிப்போமென்பதைக் காணக் காட்டில் ஒளித்திருப்பாள். ஆகையால், நாம் விரைந்து அவளைத் தேடுவோம். அவள் இக்காட்டில் இருப்பாளென்று நீர் எண்ணுவீராகில் நாம் இக்காட்டை ஓரிடமும் விடாமல் தேடுவோம். துக்கப்படவேண்டாம்" என்றுசொன்னார். இவ்விதமாக லக்ஷ்மணர் தமையனி

லக்ஷ்மணர் சீதையைத் தேடுவோம் எனல்.

டம் கொண்ட அன்பால் சொன்னவுடன் இராமர் மனந் தேறித் தம்பியுடன் சீதையைத் தேடத் தொடங்கினர். வனங்கள், மலைகள், ஆறுகள், ஓடைகள் முதலிய எல்லா விடங்களிலும் தேடியும் அவர்கள் சீதையைக் கண்டுகொள்ளவில்லை. அவ்வாறே மலைகளின் உச்சிகள் தாழ்வரைகள் முதலிய ஒவ்வோரிடங்களிலும் தேடியும் சீதையைக்காணமல் இராமர் லக்ஷ்மணரைப்பார்த்து "சுமித்திரை புத்திர, இந்த மலைகளில் எல்லாம் சீதையைக் காணேனே" என்றார். அது கேட்டு லக்ஷ்மணர் துக்கமடைந்து தணடகாரணியமெங்குந் திரிந்த பராக்கிரமமுடைய இராமரைப்பார்த்து "மகா விஷ்ணு பலிச்சக்கரவர்த்தியைக் கட்டி இப்பூமியை யடைந்ததுபோல் தாங்கள் நிச்சயமாகச் சீதையை யடைவீர்கள்" என்று கூறினர். இராமர் அடக்கமுடியாத துயரத்துடன் அவரைப்பார்த்து "லக்ஷ்மண, நான் இக்காட்டின் இடங்களெல்லாவற்றையும், பூத்த தாமரை ஓடைகளையும், அநேக குகைகளும் அருவிகளும் நிரம்பிய இம்மலையையும் தேடினேன். ஓரிடத்திலும் என் உயிரினுமினிய சீதையைக் கண்டிலேன்" என்றார். இராமர் இவ்வாறு புலம்பிச் சீதையைக் காணமல் மெலிவடைந்து துக்கத்தில் மூழ்கிக் கொஞ்சக்காலம் மெய்ம்மறந்திருந்தார். அவர் சோகத்தால் உணர்ச்சியற்று உடல் வருந்தி வெகு பரிதாபமடைந்து வெப்பமாக அடிக்கடி பெருமூச்செறிந்து அழத்தொடங்கினர். தாமரை யிதழுக்கொப்பான கண்களையுடைய இராமர் மீட்டும் மீட்டும் அழுது துயரத்தால் நெஞ்சடைத்துக்கொண்டு "ஓ சீதாய்" என்று வாய்விட்டுக் கதறினர். அப்போது அவருடைய அன்புள்ள தம்பியாரான லக்ஷ்மணர் கை கூப்பி, வெகு வணக்கமாய், அநேகவிதமாகத் தேற்றரவு கூறினர். லக்ஷ்மணருடைய வார்த்தைகளைச் சிறிதும்

சீதையைத் தேடல்.

சீதையைக் காணது இராமர் புலம்பல்

கவனியாது சீதையைக் காணுமையால் இராமர் பெயர்த்தும் பெயர்த்தும் அழுவாராயினர்.

அறுபத்திரண்டாஞ்சருக்கம்.

இராமர் சீதையை நினைத்துப பின்னும் அதிகமாகப் புலம்பல்.

தருமாத்துமாவாகிய இராமர் சீதையைக்காணுமல் தன்னை மறந்து பலவாருகப் புலம்பினர். சீதையைத் தாம் காணவில்லையாயினும் மன்மதபாணத்தால் பீடிக்கப்பட்டு அவளைக் கண்டதுபோல் இராமர் புலம்பினர்:— "என் காதலி, உனக்குப் புஷ்பங்களிடத்தில் அதிக ஆசையாகையால் நீ அசோகத்தழைகளால் உன் தேகத்தை மறைத்துக்கொண்டு என் சோகத்தை வளர்க்கின்ருய். வாழைபோன்ற துடைகளை உடைய நீ வாழைத் தோட்டத்தில் புகுந்து ஒளித்தனை. சுந்தரி, உன்னை நான் கண்டுகொணடேன்; உன்னை உன்னல் மறைக்கமுடியாது. நங்காய், நீ சிரித்துக்கொண்டு கோங்கஞ்சோலையுள் புகுகின்ருய். பிரியாய், விளையாட்டுப்போதும்; என்னுயிர் போகின்றது. ஆகையால், இந்தச் சமயத்தில் விளையாடுவது சரியன்று. அழுகைமன்றி ஆச்சிரமத்தில் விளையாடுவது தக்கதன்று. விளையாட்டில் நீ இயல்பில் ஆசை உள்ளவளென்று யானறிவேன். தடங்கண்ணுய், நீயில்லாமல் இந்தப் பர்ணசாலை வெறிதாக விருக்கிறது; சீக்கிரம் வந்துவிடு. சீதையை அரக்காகள் கவர்ந்துகொண்டு போயிருக்கவேண்டும், அல்லது புசித்திருக்கவேண்டும்; இது நிச்சயம். இல்லாவிடில், லக்ஷ்மண, நான் இவ்வாறு பரிதபிக்கையில் அவள் வாராமலிருப்பாளா? லக்ஷ்மண, கண்ணீர் விட்டு நிற்கும் இம்மான்கூட்டங்கள் அரக்கர்கள் சீதையைப் புசித்துவிட்டார்கள் என்று சொல்லுவன

இராமர் சீதையை விளித்துப் புலம்பல்.

போலிருக்கின்றன. ஓ உத்தமீ, ஓ சந்[illegible], ஓ தாயே, நீ எங்கேபோனாய். ஓ சீதாய், கைகேயி யினுடைய எண்ணம் இன்று நிறைவேறிவிட்டது! நான் சீதையோடு புறப்பட்டு வந்து அவளை யின்றித் திரும்பிச் செல்லப் போகின்றேன். இனிச் சீதையில்லாமல் எப்படி நான் அந்தப்புரத்தில் புகுவேன்? உலகம் என்னைக் கொடியவனென்றும் வீரமில்லாதவனென்றும் பழி கூறுவது நிச்சயம். சீதையை இழந்ததனால் எனக்குத் தீரமில்லை யென்பது வெளியாகும். எனது வனவாசம முடிந்து நான் அயோத்திக்குத் திரும்பிச் செல்லும்போது என்னை க்ஷேமம் விசாரிக்க வரும் ஜனகமகாராஜனை நானெவ்வாறு பார்ப்பேன்? அவர் என்னைச் சீதையின்றிக் காணும்போது தமது புத்திரி காரணமாகத் துக்கத்திலழுந்துவாரே! இனிப் பரதனும் அந்நகரத்திற்கு நான் திரும்பிச்செல்லேன். சீதையில்லையாயின் சுவர்க்கலோகமும எனக்கு வெறும்பாழாக விருக்கும். ஆகையால், லக்ஷ்மணா, என்னை இக்காட்டில் விட்டுவிட்டு நீ மாத்திரம் அயோத்திநகரம்செல். சீதையின்றி நான் ஒருபோதும் உயிரோடிருக்கமாட்டேன். நீ பரதனை இறுகத்தழுவி "இராமர் உனக்குப் பாராள உத்தரவு கொடுத்தார்" என்று நான் சொன்னதாகச் சொல். அன்றியும், என் கட்டளைப்படி நீ என் தாய்மார் கோசலை, கைகேயி, சுமித்திரை மூவர்களையும் மிக்க மரியாதையுடன் நமஸ்காரம்பண்ணி வெகு சாக்கிரதையாகப் பாதுகாப்பாயாக. பகைவரேறே, சீதையை யானிங்கு இழந்தவிதத்தை எனது தாயாருக்கு நீ விரிவாகக் கூறு" என்று இவ்வாறு இராமர் கரியகூந்தலையுடைய சீதையின் பிரிவால் துக்கத்திலாழ்ந்து புலம்ப, லக்ஷ்மணர் முகம் வாடி மிகவும் மனம் நொந்து வருந்தினார்.

இராமர் தன்னை நோதல.

அறுபத்துமூன்றுஞ்சருக்கம்.

இராமர் அடங்காத துயருறல்.

சக்கரவர்த்தி குமாரர் தமது அரிய நாயகியைப் பிரிந்து துயருற்றவராகித் தம்பியாகிய லக்ஷ்மணருக்குத் துக்கத்தை விளைவித்து மறுபடியும் பெருந் துன்பமடைந்தார். துக்கத்தில் முழுகிக்கிடக்கும் இராமர் தம்மைப்போல் துன்புற்றவராகிய லக்ஷ்மணரைப் பார்த்து நெருப்புப்போல் பெருமூச்செறிந்து வெகு பரிதாபமாக அழுதுகொண்டு சொல்லலுற்றார்:—" என்னைப்போல கொடுமைசெய்தவா வேறொருவரும் இவ்வுலகத்தில் இல்லை என்று நான் எண்ணுகிறேன். துக்கத்தின்மேல் துக்கம் ஒன்றன்பின் ஒன்றாய் இடைவிடாது தோன்றி எனது மனத்தைப் பிளக்கின்றது. நான் முற்பிறப்பில் பலதீவினைகளைச் செய்தது நிச்சயம்; அவைகளின் பயனை நான் இப்பொழுது அனுபவிக்கிறேன். அக்காரணத்தாற்றான், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு வந்துகொண்டிருக்கின்றது. நான் நாடிழந்ததும், பந்துக்களைவிட்டுப் பிரிந்ததும், என் தந்தை மாண்டதும, என் தாயைவிட்டு நான் பிரிந்ததுமாகிய இவைகள் என் நினைவில் வந்து என் துயரத்தை அதிகப்படுத்துகின்றன. ஓ லக்ஷ்மணா, இந்தத் துக்கங்களெல்லாம காட்டிற்கு நான் வந்தபோது சீதையும் என்னுடனிருந்தமையால் எனக்கு ஒரு துன்பமும் செய்யவில்லை. இப்பொழுது சீதை என்னைப்பிரிந்தமையால் அவைகள் விறகூட்டப்பெற்ற தீயைப்போல மறுபடி மண்டி எரிகின்றன. அரக்கன் ஒருவன் பலாத்காரமாய் என் நாயகியை ஆகாயவழியாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்; இது நிச்சயம். அழகான குரலையுடைய என் மனைவி அப்பொழுது பயந்து கண்டோர் இரங்க

இராமர் புலம்பல்.

சீதை என்ன துன்பப்பட்டாள் எனல.

அடிக்கடி பலவாறு புலம்பியிருப்பாள்; இதற்குச் சந்தேகமில்லை. ஐயோ! சந்தன களபம் பூசப்பெற்ற என் நாயகியின் திரண்ட தனம் அரக்கனால் உண்ணப்படும் பொழுது இரத்ததில் மூழ்கியிருக்கும்; இது நிச்சயம். இனிமையாகவும் மெதுவாகவும் தெளிவாகவும் பேசவல்லதும் கருங்குழல் சூழ்ந்ததுமாகிய அவள் முகம் அரக்கனால் பற்றப்பட்டபொழுது இராகு கவ்விய சந்திரன்போல ஒளி யிழந்திருக்கும். மிக வணக்கமுள்ள என்னுடைய காதலியின்கழுத்தைப் பிசிதவுணராகிய அரக்கர்கள ஆகாசத்தில் போகும்போது முறித்து இரத்தத்தைக் குடித்திருப்பார்கள். நான் பிரிந்துவிட அவள் காட்டில் தனித்திருந்தபொழுது அவளை நான்கு பாகங்களிலும அரக்கர்கள் சூழ்ந்து பற்றிஇழுக்க அத்தடங்கண்ணாள் கிரவுஞ்சப் பக்ஷியைப்போல் வருந்தி அழுதிருப்பாள். ஓ லக்ஷ்மணா, இந்தக் கற்பாறையிலன்றோ அந்தப் பெருமிதமுடைய சீதை என்னுடன் வீற்றிருந்துகொண்டு புன்னகையோடு உன்னிடம் பலவிஷயங்களைப்பற்றிப் பேசுவது? இது கோதாவரி நதி; நதிகளுள்மேம்பட்டது; சீதை அதனிடம் மிக்க பிரீதி உடையள். அவள் அங்கே போயிருப்பளோ? அவள் அங்கு ஒருநாளும் தனியாகப் போவதில்லை.

சீதை எங்குபோயினள் எனல.

தாமரைப பூப்போன்ற முகமும் தாமரையிதழ்போன்ற கண்களுமுடைய சீதை தாமரைமலர் கொண்டுவரப் போயிருப்பளோ? அதுவும் ஆகாது. என்னை இன்றி அவள தாமரை மலரெடுக்க ஒருபோதும் போகமாட்டாள். பல பூத்தமரங்களடர்ந்து பலவகைப் பக்ஷிகள் நிரம்பிய இந்தக் காட்டுக்குள் அவள் போயிருப்பாளோ? அதுவும் கூடியதன்று. அவள மிகப் பயந்தவளாகையால் தனியாக இதற்குள் போகாள். சூரியனே, நீ மனிதர்களுடைய புண்ணியபாபச் செயல்களை யறிந்தவன்;

சீதை எங்கே என்று சூரியனை யும் வாயுவையும் வினவல்.

அன்றியும், அவர்களுடைய செயல்களின் பொய்மை உண்மைகளுக்கும் சாக்ஷியாக விளங்குகின்றவன்; நான் வேண்டுகின்றேன், சோகத்தில் முழுகிக்கிடக்கும் எனக்கு என் காதலி எங்காவது போயினளா அல்லது கொலையுண்டாளா என்பதைச் சொல்லு. வாயுவே, இவ்வுலகத்தில் நடப்பதில் உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை; ஆகையால், நீ என் மனைவி என்னவாருனள்—தூக்கிக்கொண்டு போகப்பட்டாளா? கொலைப்பட்டாளா? அல்லது வழியில் என்னை எதிர்பார்த்து நிற்கின்றாளா? என்பதை எனக்குச்சொல்லு." இராமர் சோகத்தால் தன்னை மறந்து இவ்வாறாகப் புலம்ப அவரைப்பார்த்து வெகு தைரியசாலியும் நியாயத்தைக் கைவிடாதவருமான லக்ஷ்மணர் இவ்வாறு தக்க வார்த்தைகளைச் சொல்வாராயினர்:—"மனத்தைத் தைரியம் பண்ணிககொண்டு துக்கத்தை நீக்கிவிட்டு ஊக்கத்தோடு சீதையைத் தேடத்தொடங்கும். ஊக்கமுள்ளவர்கள் இவ்வுலகத்தில் எவ்வளவு பெருங் கஷ்டங்கள் நேரிடினும் ஒருபொழுதும் சோர்வு அடையமாட்டார்கள்." மிக்க பராக்கிரமசாலியாகிய லக்ஷ்மணர் இவ்வாறு சொல்லியும் அதிக துன்பப்பட்டுக் கொண்டிருந்த இராமர் அவர் சொன்ன சொல்லைச் சிறிதும் கவனியாது பொறுமை இழந்தவராகி மறுபடியும் பெருந்துக்கத்தில் முழுகினர்.

அறுபத்துநான்காஞ்சருக்கம்.

ஸ்ரீராமர் சீதையைத் தேடித் தென்திசை சென்று அரக்கர் அடிச்சுவடுகளைக் கண்டு இவ்வுலகத்தை அழித்துவிடுகிறேன என்று கோபம்கொள்ளல்.

இராமர் துயரமுற்று லக்ஷ்மணரை நோக்கி "ஓ லக்ஷ்மண, நீ விரைவாகக் கோதாவரியாற்றுக்குச் சென்று

அங்கே தாமரைமலர் எடுக்கச் சீதை போயிருக்கிருளா என்று பார்த்துவா" என்று மிக இரக்கமாகச் சொன்னர். அதை லக்ஷ்மணர்கேட்டு வெகுதுரிதமாக அழகிய கோதாவரிக்குச் சென்று அந்நதி யெங்கும் நன்ருகத் தேடிப்பார்த்து வந்து இராமரைநோக்கி "நான் ஸ்நானகட்டங்கள் எங்குந் தேடினேன்; சீதையை ஓரிடத்திலும் கண்டிலேன். நான் உரத்துக்கூபபிட்டும் பார்த்தேன். என் குரலே அவள் கேட்டதாகத் தெரியவில்லை. நமது துயரத்தைப் போக்குகின்ற மெல்லிய இடையையுடைய வைதேகி எங்கு போயினுள் என்பது தெரியவில்லை" என்ருர். இவ்வாறு லக்ஷ்மணர் சொன்னதைத் துககத்தில் முழுகியிருக்கும் இராமர் கேட்டுத் தாமே கோதாவரி யாற்றுக்குச் சென்ருர். அந்நதியைச் சேர்ந்தவுடன் "சீதை எங்கே" என்று அவர் வினவினர். அப்போது சீதையைக் கொலைக்காளாகிய அரக்கர்கோன் கவர்ந்து சென்ருனென்று கோதாவரி நதியாவது அங்குள்ள பிராணிகளாவது சொல்லவில்லை. சீதையின் செய்தியை இராமருக்குச் சொல் என்று பிராணிகளால் வேண்டப்பட்டிருந்தும் இராமர் துக்கத்துடன் கேட்டபோது அந்நதி கொடிய இராவணனுடைய பயங்கரமான ரூபத்தையும் கோரமான செய்கையையும் நினைத்துப் பயந்து ஒன்றும் சொல்லாம லிருந்துவிட்டது. சீதையைக் கோதாவரியால் காணலாம் என்ற எண்ணம் முற்றுப் பெருத இராமர் அவள் பிரிவால் மாழ்கி, லக்ஷ்மணரைப் பார்த்து "லக்ஷ்மண, கோதாவரிநதியும் ஒன்றும் மறுமொழி தந்திலது. சீதையின்றி நான் ஊர்போய் அவள தாயாருக்கும் ஜநகருக்கும் யாது சொல்லுவேன்? இராச்சியத்தை இழந்து, காட்டிற்குவந்து, இங்குள்ள காய்கனிகளைப் புசித்து, யான்பட்ட கஷ்டங்களைப் போக்கிக்கொண்டுவந்த சீதை எங்கேபோயினுள்? சுற்ற மித்திரர்களைப் பிரிந்து, சீதை

இராமர் சீதை எங்கே என்று கோதாவரி நதியை வினவல.

யையும் காணாது, நெடுநேரம் விழித்திருக்குமெனக்கு இனி இரவு தொலையாமல் மிகவும் பெரிதாகத் தோன்றுமே. சீதையைக் காணவேண்டி, மந்தாகினி நதியிலும், ஜனஸ்தானத்திலும், இந்தப் பிரஸ்ரவணமலையிலும் நான் தேடுவேன். வீரனே, பார்; இந்த மான்கள் அடிக்கடி என்னை உற்றுப்பார்க்கின்றன. அவைகளின் தோற்றத்தை நோக்குமிடத்து அவைகள் என்னிடம் ஏதோ சொல்ல விரும்புவன போலத் தோன்றுகின்றன" என்று உரைத்து, புருஷோத்தமராகிய இராமர் அம்மான்களைப் பார்த்து, தமது கண்களில் நீர் ததும்ப "சீதை எங்கே" என்று கேட்டனர். அப்படி அவர் கேட்டவுடனே அம்மான்கள் எழுந்து தென்முகமாக ஆகாசத்தை நோக்கிக்கொண்டு சீதையைத் தூக்கிக்கொண்டு போனவழி வழியே நடக்கலாயின. அப்படிப் போகும் மான்கள் இராமரைத் திரும்பித் திரும்பிப் பார்த்து அந்த வழியையும் பூமியையும் அடிக்கடி உற்றுநோக்கி அழுதுகொண்டு சென்றன. இவைகளையெல்லாம் லக்ஷ்மணர் நன்றாகப்பார்த்து யோசித்து மிக்கவிசனத்துடன் தமது தமையனாரைப் பார்த்து "ஐய, சீதை எங்கே என்று தாங்கள் கேட்டவுடன் இம்மான்கள் எழுந்து பூமியைக் காட்டித் தென்திசையை நோக்கிக்கொண்டு செல்லுகின்றன. ஆகையால், நாம் தென்திசையை நோக்கிச் செல்லுவோம். அப்படிச் செல்வதால் நாம் சீதையை அல்லது அவளைப்பற்றிய அடையாளங்களைக் காணலாம்" என்றார். இராமர் "அப்படியே ஆகட்டும்" என்றுசொல்லி லக்ஷ்மணருடன் தென்திசையை நோக்கிப் போகும்வழி யெல்லாம் சீதையைப் பார்த்துக்கொண்டே போயினர். அவ்வாறு அவ்விரு சகோதரர்களும் ஒருவருடன் ஒருவர் பேசிக்

மான்களை வினவல்.

மான்கள் சீதை சென்ற வழிகாட்டல்.

வழியில் சீதை யணிந்த புஷ்பங்கள் விழுந்து கிடக்கக் காணல்.

கொண்டு போகையில் சில புஷ்பங்கள் வழியில் விழுந்து கிடக்கக் கண்டார்கள். தரையில் விழுந்திருந்த புஷ்பங்களை இராமர் கண்டு விசனமுற்று லக்ஷ்மணரைப் பார்த்து "லக்ஷ்மணா, இம்மலர்கள் நான் சீதைக்குக் காட்டில் பறித்துக்கொடுத்தவை. அவைகளை அவள் வாங்கித் தலைமேலணிந்துகொண்டாள். இவைகளை என் நன்மை கருதியே சூரியனும் காற்றும் பூமியும் வாடாமல் காப்பாற்றி வைத்தன" என்றார். இவ்வாறு லக்ஷ்மணரிடம் சொல்லித் தருமாத்துமாவும் புருஷோத்தமருமான நீண்ட கரங்களையுடைய இராமர் தனக்கெதிரில் உள்ள அநேக அருவிகள் பெருகிக்கொண்டிருந்த மலையை நோக்கி "ஓ கிரிராஜ, இவ்வழகிய காட்டில் என்னைப்பிரிந்து பரிதபிக்கும் அழகிய அங்கங்களையுடைய சீதையை நீ கண்டதுண்டா?" என்று கேட்டார். பின்பு வெகு கோபத்துடன் சிங்கம் ஒரு மானைப் பார்த்துப் பேசுவதுபோல அம்மலையைக் கடிந்து நோக்கி, "ஓ மலையே, பொன்னின் நிறமுடைய என் அழகிய சீதையை உடனே எனக்குக் காட்டு; இல்லையாயின் உனது தாழ்வரைகளைப் பொடிபடுத்துவேன்" என்றார். எவ்வாறு கேட்டும அம்மலை சீதையைக் காட்டிற்றில்லை. மறுபடியும இராமா அம்மலையைப் பார்த்து, "நீ என் பாணததினக்கினியால் எரியுண்டு நீருகப்போகிறாய். உன்னிடத்திலுள்ள தழைகளும் கிளைகளும் எல்லாம் முழுது மழிந்து உன்னிடம் ஒருவரும் சேராது போய்விடுவர்" என்றுரைத்து, லக்ஷ்மணரை நோக்கி "ஓ லக்ஷ்மணா, இக்கோதாவரியையும், பூரண சந்திரன்போன்ற முகத்தையுடைய சீதை சென்ற இடத்தை எனக்குச் சொல்லாதொழியுமாயின், நீர் வற்றும்படி செய்கிறேன்" என்றார். இராமர் மிகவும் சினந்து, தமது கண்களால் எல்லாவற்றையும் எரித்துவிடுபவர்போலத் தம்மைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் பார்த்து, அங்கு அரக்கர்கோ

மலையை விளுவல.

சீதையின் அடிச்சுவடு காணல்.

னுடைய அடிச்சுவடுகளையும் அவனாற் பற்றப்பட்டபோது பயந்து இராமரைக் காணவேண்டி அங்குமிங்கும் ஓடித்தத்தளித்த சீதையினுடைய அடிச்சுவடுகளையும் கண்டார். இந்த அடிச்சுவடுகளையும் முறிந்த வில்லையும், தூணியையும், அழிந்த தேரையும் கண்டு இராமர் மனம் கலங்கித்தமதுதம்பியைப் பார்த்து "லக்ஷ்மணா, இதோபார்! சீதையினுடைய பொன்னாபரணத் துண்டங்களும் அவள் அணிந்திருந்த மாலைகளும் அங்குமிங்கும் சிதறுண்டிருக்கின்றன. பொற்றுளிகள்போல இரத்தத்துளிகள் பூமியில் காணப்படுகின்றன. லக்ஷ்மணா, மாயாவிகளான அரக்கர்கள் சீதையைப் பல துண்டங்கள் செய்து புசித்துவிட்டார்கள் போலத் தோன்றுகிறது. சீதையின்பொருட்டு ராக்ஷசர்கள் இங்கு ஒருவரோடொருவர் எதிர்த்துப் பெரும் போர் செய்திருக்கவேணடும். முத்துக்களும் வயிரக்கற்களும் இழைக்கப்பட்டு இங்கு முறிந்து கிடக்கின்ற இந்தவில் யாருடையது? இது தேவர்களது அல்லது ராக்ஷசர்களது ஆகவேண்டும்.

முரிந்த தோ முதலிய காணல.

இதோ உடைந்து கிடக்கின்ற இளஞ்சூரியன்போன்ற வைடூரிய மணிகளிழைக்கப்பட்ட பொற்கவசம் யாருடையது? இதோ முரிந்துகிடக்கின்ற திவ்வியமாலைகள் கட்டப்பட்டதும் நூறுகம்பிகள் போடப்பட்டதுமான குடை யாருடையது? பேய்முக முடையனவும் மார்பிற் கவசம் பூண்டனவுமான இந்தப் பெரிய பயங்கரமான கோவேறுகழுதைகள் யாருடைய போரில் கொல்லப்பட்டன? இதோ உடைந்து, தரையில் கவிழ்ந்து, கொழுந்துவிட்டெரியும் செழுந்தீக்கொப்பான கொடிகளையுடையதாய்க் கிடக்கின்ற இந்தப் போர்த்தேர் யாருடையது? இதோ தலையற்றுப் பூமியில் கிடக்கின்ற தங்கக்கட்டமைந்த நெடிய பாணங்கள யாருடையவை? ஓ லக்ஷ்மணா, இதோபார்! இவ்விரண்டு தூணிகளும் பாணங்கள் நிரம்பி

இருந்தபோதிலும் சிறிதும் உப்யோகமற்றவைகளாகச் செய்யப்பட்டுக் கிடக்கின்றன. இதோ கையிற் பிடித்த குதிரைச் சம்மட்டியோடுங் கடிவாளத்தோடும் மாண்டு கிடக்கின்ற தேர்ப்பாகன் யாருடைய சாரதி? தலைப் பாகையும், குண்டலங்களும் தரித்துக் கையிற்பிடித்த சாமரங்களுடன் இறந்துகிடக்கின்றவர்களாகிய இந்தச் சாமரம் போடுகிறவர்கள் யாருடைய ஆட்கள்? இந்த அடிச் சுவடுகள் அரக்கர்களுடையவைகளே. மாயங்கள் வல்ல கொடிய மனமுள்ள அரக்கர்களை யான் எனக்குப் பகைவர்களாக்கிக்கொண்டேன். ஏழையாகிய சீதை இறந்திருக்கவேண்டும்; அல்லது அவளை அரக்கர்கள் விழுங்கியிருக்கவேண்டும்; அல்லது தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டும். ஐயோ! இப்பெருங்காட்டில் சீதையை அரக்கர்கள் கொண்டுபோகும்பொழுது தருமம் அவளைக் காப்பாற்றவில்லையே! ஓ லக்ஷ்மணா, ஜானகியை அரக்கர்கள் விழுங்காமலும் கவர்ந்துகொண்டு போகாமலும் தருமங் காப்பாற்றாதபோது இவ்வுலகத்தில் எனக்கு நன்மைசெய்யத்தக்கவர்கள் தெய்வதன்மையுள்ளவர்கள் யாரிருக்கிறார்கள்? இதனாலேயே சர்வ பிராணிகளையும் படைத்த எல்லாம் வல்ல தேவதேவனை மனிதர்கள் மடமையால் மதிக்கின்றிலர். வெகு சாந்தமுள்ளவனும், உலகத்திற்கு எப்போதும் நன்மையையே நாடுபவனும், ஐம்பொறிகளை அடக்கினவனுமாகிய என்னைப் பராக்கிரம மற்றவன் என்று தேவர்களும் இதனால் எண்ணுவார்கள். லக்ஷ்மணா, இந்த நல்ல குணங்கள் என்னைச் சேர்ந்தமையால் குற்றமாயின. அரக்கர்களையும், மற்றெல்லாப் பிராணிகளையும் நான் நாசம்பண்ணுவதற்காக, ஊழிகாலத்தில் சந்திரனுடைய காந்தியைச் சூரியனுடைய கிரணம் தொலைப்பதுபோல என் துகுணங்களெல்லாவற்றையும் அடக்கி என்

இராமர் கோபம் கொள்ளல்

வல்லமை இன்று பிரகாசிக்கட்டும். ஓலக்ஷ்மணா, யக்ஷர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், ராக்ஷசர்கள், கின்னரர்கள், மானிடர்கள் முதலிய யாவருக்கும் சுகமில்லாமல் போகட்டும். இன்று என் வில்லினின்று விடப்படும் பாணங்களால் ஆகாசம்மறைவதாக. நான் இம்மூவுலகங்களிலும் வாழும் பிராணிகளெல்லாவற்றையும் அசைவற்று நிற்கச்செய்கிறேன். ஆகாசத்தில் கிருகங்களை ஓடாது செய்கிறேன் சந்திரனை மறைத்து விடுகிறேன். காற்றின் இயக்கத்தை மாற்றுகிறேன். சூரிய கிரணத்தையும் அக்கினியையும் அழித்துவிடுகிறேன். மலைகளை மணல்களாகப் பொடிபடுத்துகிறேன. சமுத்திரத்தையும் மற்றும் நீர் நிலைகளையும் வற்றும்படி செய்கிறேன். மரம் செடி கொடி முதலிய யாவற்றையும் அழித்துவிடுகிறேன். தேவர்கள் சீதையை என்னிடம்சேர்க்கா தொழிவார்களாயின் ஊழிகாலத்தில் அழிகின்ற இம்மூவுலகங்களையும் இப்போதே நாசம் பண்ணி விடுகிறேன். சீதையை என்னிடம் சேர்க்கார்களாயின் இந்த நிமிஷத்திலேயே எனது பராக்கிரமத்தை இந்திரனை முன்னிட்டதேவர்கள் காண்பார்கள். ஓ லக்ஷ்மணா, என் வில்லினின்று இடையறாது விடப்படும் பாணங்களால் மொத்துண்டு ஆகாசத்தில் யாரும் செல்லமாட்டார்; விலங்குகளும் பறவைகளும் மயங்கி அழிந்துவிடும்; உலகம் நிலைகுலைந்து தலை தடுமாறிப்போம்.

மூவுலகங்களையும் அழிக்க வேண்டல்.

கர்ணபரியந்தம் வில்லை யிழுத்து வளைத்துப் பிராணிகளால் தாங்கமுடியாத என் அம்புகளால் சீதையின் நிமித்தம் இவ்வுலகில் பிசாசர்களும் அரக்கர்களும் இல்லையாம்படி செய்கிறேன். கோபத்தால் விடப்படும் என் பாணங்களுடைய பலத்தையும் அவைகள் வெகுதூரம் போவதையும் தேவர்கள் இன்று பார்க்கட்டும். மூவுலகங்களும் எனது கோபத்தால் நாசமடைந்து தேவர்கள், அசுரர்கள், பிசாசர்கள், ராக்ஷசர்கள் ஒருவரும் இல்லையாவார்கள். தேவர்கள், அசுரர்கள், யக்ஷர்

கள், ராக்ஷசர்கள் முதலியவர்களுடைய இருப்பிடங்கள் என் பாணங்களால் பிளப்புண்டு துகளாய்ப்போம். உலக மெல்லாவற்றையும் தலைகீழாக்கிவிடுவேன். எனது சீதையை அவள் இருந்தபடி அல்லது இறந்தபடி அல்லது அவளை எடுத்துப் போனபடி என்னிடம் தேவர்கள்கொண்டு வந்து சேர்க்கார்களாயின் யான் என்னுடைய பாணங்களால் சராசர மனைத்தையும் அழித்து மாற்றிவிடுவேன்" என்றார். இவ்வண்ணம் கூறி இராமர் கோபத்தால் உதடு துடிக்க, கண்கள் சிவந்து, மரவுரியைக்கட்டிச் சடையை முடித்து, தமது வில்லை லக்ஷ்மணரிடமிருந்து வாங்கிக் கையிற்பற்றி, கொடிய சாப்பம் போன்ற அநேக பாணங்களை அதில் தொடுத்து, பிரளயகாலத்தில் தோன்றிய அக்கினிபோலக் கோபங்கொண்டு "லக்ஷ்மணா, மூப்பு, சா, கூற்று, விதி முதலியவைகளைப் பிராணிகளால் தடைசெய்ய முடியாதவாறு போல, கோபங்கொண்ட என்னை விலக்க ஒருவராலும் முடியாது. இன்று யான் என் அழகிய உத்தமியாகிய சீதையை அடையேனாயின் தேவர்கள், கந்தர்வர்கள், மானிடர்கள், பன்னகர்கள் வாழும் இவ்வுலகத்தை மலைகளோடு தலை தடுமாறச் செய்து விடுகிறேன்" என்றனர்.

அறுபத்தைந்தாஞ்சருக்கம்.

லக்ஷ்மணர் இராமரைக் கோபத்தையடக்கும்படி வேண்டல

சீதையின் பிரிவால் மிகவுந் துன்புற்று, ஊழித்தீப் போல மூன்றுலகங்களையும் அழித்துவிடக் கருதி, நாணேற்றிய தம் வில்லை அடிக்கடி பார்த்துப் பெருமூச்செறிந்துகொண்டு, ஊழிகாலத்தில் உலகங்கள் யாவையும் எரிக்கும்படி நிற்கும் மகதேவன்போல இராமர் நிற்க, லக்ஷ்மணர் முன் ஒருபொழுதும் காணாத இராமருடைய

பெருங் கோபத்தைக் கண்டு முகம்வாடி அஞ்சலி செய்து "ஐயா, தாங்கள் இதற்குமுன் எப்பொழுதும் வெகுசாந்த குணமுடையவராய், ஐம்புலன்களை யடக்கி, எல்லாவுயிர் களுக்கும் இனியராய் இருந்து, இப்பொழுது கோபம்மேலிட்டு தங்களுடைய இயற்கைக் குணத்தைத் துறப்பது நியாயமன்று. சந்திரனிடத்தில் நிலவும், சூரியனிடத்தில் வெயிலும், காற்றினிடத்தில் இயக்கமும், பூமியினிடத்தில் பொறுமையும் போலத் தங்களிடத்தில் சிறந்த புகழ் எப்போதும் விளங்கிக்கொண்டிருக்கிறது. ஒருவருடைய குற்றத்துக்காகத் தாங்கள் இவ்வுலகத்தை யெல்லாம் அழிப்பது நியாயமன்று. இதோ முரிந்து கிடக்கும் தேர் ஒருவனுடையதன்றிப் பலரதன்று. ஆனால் யாருடையதென்பதும் என்ன காரணத்தினால் முரிக்கப்பட்டதென்பதும் எனக்குத் தெரியாது. ஓ கோமகனே, இவ்விடத்தைப் பாரும்; இரத்தந் தோய்ந்து கழுதைக்குழம்பும் தேர்ச்சக்கரமும் புதைந்து கிடக்கின்றது. இங்கே பயங்கரமான பெருஞ் சண்டை ஒன்று நடந்திருக்கிறது. அந்தச் சண்டை இங்குள்ள அடையாளங்களால் ஒருவனுடனன்றி இரண்டு பேர்களுடன் நடந்ததாகக் காணப்படவில்லை. சேனைகளின் அடிச்சுவடு இவ்விடத்தில் இல்லை. ஆதலால் ஒருவன் செய்த கொடுமைக்காகத் தாங்கள் இவ்வுலகத்தை யெல்லாம் அழிப்பது நியாயமன்று. அரசர்கள் சாந்தமும் அமைதியு முள்ளவர்களாய்க் குற்றத்துக்குத் தக்க தண்டனை செய்வார்கள். தாங்களே எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுக்கும் கண்கண்ணுகவும் கதியாகவு மிருக்கிறீர்கள். யார்தான் தங்கள் மனைவியை எடுத்துப்போனதைச் சரியென்று எண்ணுவார்கள். யாகத்துக்குத் தீக்ஷை செய்துகொண்டவர்களுக்கு நல்லவர்களொருபொழுதும் கெடுதல் செய்யமாட்டார்கள். அதுபோல மலை கடல்களும், தேவகந்தர்வ தானவர்களும் தங்

லக்ஷ்மணர் கோபம்வேண்டாமெனல்.

களுக்கு ஒருபொழுதும் தீமை செய்யமாட்டார்கள். தாங்கள் இப்பொழுது வில்லைக் கையில் பற்றி என்னையும் முனிவர்களையுந் துணையாகக் கொண்டு சீதையைக் கவர்ந்துபோனவனைத் தேடவேண்டும். சீதையை எடுத்துப் போனவனைக் காணும்வரையும் நாங்கள் கடல் மலை காடுகளையும், பயங்கரமான குகைகளையும், நீர் நிலைகளையும், தேவ கந்தர்வ லோகங்களையும் தேடுவோம். தேவர்கள் நல்லபடியாகச் சீதையைக் கொணர்ந்து கொடாராயின் பின்பு தாங்கள் செய்யவேண்டியதைச் செய்யலாம். சீலத்தையும், அடக்கத்தையும், விநயத்தையும், நீதியையும் மேற்கொண்டு தாங்கள் சீதையைப் பெறுதுபோனால் பின்பு இந்திரனுடைய வச்சிராயுதத்துக் கொப்பான பொன்புனைந்த தங்கள் பாணங்களைச் செலுத்தித் தாங்கள் இவ்வுலகம் முழுதையும் அழிக்கலாம்.''

சீதையைத் தேடுவோம் எனல்.

அறுபத்தாறுஞ்சருக்கம்.

லக்ஷ்மணர் பெயர்த்தும் இராமரைத் தேற்றுதல்.

இராமர் இவ்வாறு சோகமுற்று அநாதைபோலப் புலம்பித் துக்கத்தால் மீதூரப்பட்டு மூர்ச்சை அடைந்தாராக, லக்ஷ்மணர் அவருடைய பாதத்தில் பணிந்து அவரைத் தேற்றுதல் செய்யத் தொடங்கி "தசரதர் தவத்தையும் பல புண்ணியங்களையும் இடையறாது புரிந்து தேவர்கள் அமிர்தத்தை அடைந்தது போலத் தங்களைக் குமாரராகப் பெற்றார். தங்களுடைய உத்தம குணங்களினால் தங்கள்மேல் பேரன்பு வைத்திருந்த தசரதர் தங்கள் பிரிவாற்றாமையால் மாண்டார் என்று பரதர்

லக்ஷ்மணர் தேற்றரவு கூறல்.

சொல்ல யான் கேட்டுளேன். ஓ காகுத்த, தாங்களே இந்தத் துன்பத்தைச் சகிக்கிராயின் அறிவிலிகள் வேறு யார் சகிக்கவல்லார் ? ஓ புருஷோத்தம, துன்பந் தணிவீராக. துன்பம் ஒவ்வொருவரையும் பற்றினும் கணத்தில் அழிந்துபோகும். இது உலகத்தின் சுபாவம். நகுஷ மகாராஜாவின் குமாரர் யயாதி என்பவர் தேவபதவியையடைந்தும் தவறு செய்தபடியால் அதையிழந்தார். நமது தந்தையின் புரோகிதரான வசிஷ்டமுனிவருடைய குமாரர்கள் நூற்றுவரும் ஒரே நாளில் மாண்டார்கள். எல்லாப் பிராணிகளுக்கும் தாயாகிய இந்தப் பூமிதேவிக்கும் நடுங்குதல் துன்பம் உண்டாகின்றது. உலகத்திற்கு இரு கண்களாக விளங்குபவர்களும் சர்வவஸ்துகளுக்கும் காரணமாயுள்ளவர்களும் மகாபலசாலிகளுமாகிய சந்திர சூரியர்களுக்கும் கிரகணதுன்பம் நேரிடுகின்றது. பெரிய பூதங்களுக்கும் தேவர்களுக்குங் கூடத் தெய்வத்தைக் கடக்க முடியாது. இந்திரன் முதலான தேவர்களுக்கும் சுகமும் துக்கமும் உண்டென்று நான் கேள்விப்பட்டுளேன். ஆகையால், தாங்கள் இவ்வாறு துயரப்படுவது சரியன்று. சீதை இறக்கினென், பிறரால் கவரப்படினென், தாங்கள் அதற்காக ஏழைபோலப் புலம்புவது தக்கதன்று. உண்மை ஞானிகள் எவ்வகைத் துன்பங்கள் நேரிடினும் அசையார்கள். ஆகையால் உத்தமரே, தக்கதியாதென்று ஆராய்ந்தறிக. தங்களைப்போன்ற பேரறிவினை யுடையவர்கள் தங்களறிவினாலேயே நன்மை தீமைகளைப் பகுத்தறிகின்றார்கள். பலன் அறியப்படாதனவும் முடிவு தெரியாதனவுமான காரியங்கள் முயற்சி இன்றி முற்றுப்பெற மாட்டா. தாங்களே இவைகளை எனக்கு எத்தனையோ தரம் சொல்லியிருக்கின்றீர்கள். பிருகஸ்பதிக் கொப்பான அறிவுள்ள தங்களுக்கு யாரால் புத்திசொல்ல முடியும்? தங்களுடைய புத்தியைத் தேவர்களாலும் அளவிட முடியாது. அவ்விதமான புத்தி இப்பொழுது துக்

கத்தால் சோர்ந்து தூங்குகின்றது; நான் அதைத் துயிலு ணர்த்துகின்றேன். இக்ஷ்வாகுகுல ரத்தினமே, தங்களு டைய தேவ வலிமையையும் மானிட வலிமையையும் நன் ருக ஆராய்ந்து பின் பகைவனை யடக்க முயலுங்கள். ஓ புருஷோத்தம, உலகங்கள் எல்லாவற்றையும் அழிப்பது யாது காரணம்பற்றி? ஆகையால் தங்களுடைய கொடிய பகைவனைக் கண்டறிந்து சீதையை மீட்கும வழியைத் தேடுங்கள்" என்று கூறினர்.

அறுபத்தேழாஞ்சருக்கம்.

இராமர் இராவணனால் வெட்டப்பட்டு விழுந்த ஜடாயுவைக் காணல்.

லக்ஷ்மணர் இவ்வாறு நலமுறுதியான இனிய வார்த் தைகளைச் சொல்ல, நன்மையை எப்போதும கடைப் பிடிப்பவராகிய இராமர், அவைகளை ஒப்புக்கொண்டார். உடனே பெருந் தோள்களையுடைய இரா மர் தமது அழகான வில்லை ஊன்றிக்கொ ண்டு நின்று லக்ஷ்மணரை நோக்கி "அடா தம்பி, நாமிப்பொழுது எங்கேபோகவேண் டும், என்னசெய்யவேண்டும், என்ன உபாயத்தினால் சீதை யை அடையலாம என்பவைகளைப்பற்றி யோசனைசெய்" என்றார். அதற்கு உத்தரமாக லக்ஷ்மணர் துயருறும் இராமரைப்பார்த்து "ஐய, அரக்கர் கூட்டங்கள் நிறைந்து அநேக கொடிகளும் மரங்களுஞ் சூழ்ந்திருக்கின்ற இந்த ஜனஸ்தானத்தில் சீதையைத்தேடவேண்டும். இங்கேமலை களின் நடுவிலே துர்க்கங்களும் மலைப்பி ளவுகளும் பலவுள்ளன. பல்வகை மிருகங் கள் வசிக்கின்ற குகைகளும் மலைமுழை ஞ்சுகளும் கின்னர கந்தர்வர்களுடைய

இராமர் என்ன செய்வதென்று லக்ஷ்மணரை வினவல்.

லக்ஷ்மணர் சீதையைத் தேடல்செய்யத்தக்கதென்றல்.

இருப்பிடங்களும் அநேக மிருக்கின்றன. நாமிருவரும் இவைகளை யெல்லாம் தேடிப்பார்ப்போம். தங்களைப் போன்ற பெரியோர்கள், காற்றின் வேகத்தால் மலைகள் அசையாமல்நிற்பதுபோல, ஆபத்துக்காலங்களில் சிறிதும் மனம் அசையாதிருப்பார்கள்" என்றனர். இந்தச் சொற்களைக் கேட்டு இராமர் வெருண்டு வில்லில் கொடிய கூரிய பாணத்தைத் தொடுத்துப் பிடித்துக்கொண்டு லக்ஷ்மணரோடு காடெங்குந் தேடினார். அப்போது அவர் எருவைக்கரசனாகிய ஜடாயு மலைபோலப் பூமியில் விழுந்து தேகமெல்லாம் இரத்தந் தோய்ந்து கிடப்பதைக் கண்டு

இராமர் ஜடாயுவைக் காணல்.

லக்ஷ்மணரைப் பார்த்து "கழுகுருக்கொண்டு காடெங்குந் திரியும் இவ் வரக்கனே சீதையைப் புசித்தவன். இதில் சந்தேகமே யில்லை. அத்தடங்கண்ணாளைத் தின்றுவிட்டு இவன் இளைப்பாறுகின்றான். நான் நேராகச் செல்லும் கூர்மையான பாணங்களால் இவனை யிதோ வதைக்கிறேன்" என்றுசொல்லிக் கடல் சூழ்ந்த நிலவுலகத்தை நடுங்கச் செய்வதுபோல் கோபமடைந்து வில்லில் கொடிய பாணங்களைச் சந்தித்துக்கொண்டு கழுகரசனை நோக்கி ஓடினார். ஜடாயு தசரத புத்திரரான இராமரைப் பார்த்து நுரையுடன் இரத்தத்தைக் கக்கிக் கொண்டு "சிரஞ்சீவி, இப்பெருங்காட்டில அரிய மூலிகையைப்போல நீர் தேடித்திரியும் அப்பெண்ணணங்கையும் என் பிராணனையும் இராவணன் கவர்ந்துகொண்டு போய்விட்டான். ஓ ராகவா, நீரும் லக்ஷ்மணரு மில்லாத சமயத்தில் மிகு பலசாலியாகிய இராவணன் சீதையைத் தூக்கிக்கொண் டோடுவதை நான் பார்த்து, அவளை மீட்பதற்காக இராவணனை எதிர்த்துப் போர்புரிந்து அவன் இரதத்தை அழித்துக் குடையை முரித்து அவனைப் பூமியில் வீழ்த்தினேன். அவ

ஜடாயு சீதையின் வரலாறு கூறல்.

னுடைய முரிந்த வில இது. அவனுடைய ஒடிந்த பாணங்கள் இவை. போரி லழிந்த அவனுடைய தேர் இது. என து இறக்கைகளின் வேகத்தால் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்த அவனுடைய சாரதி இவன். நான் சிறிது சோர்ந்த சமயம் பார்த்து இராவணன் என் சிறகுகளை வாளால் வெட்டிச் சீதையைத் தூககிக்கொண்டு ஆகாசமார்க்கமாகச் சென்றுவிட்டான். அரககனால் முன்னமே குற்றுயிராககப்பட்ட என்னைக் கொல்வது உமக்குத் தக்கதன்று" என்றார். இராமர் இவ்விதமாகச் சீதையின் வரலாற்றைக் கேட்டுக் கையிலிருந்த பெரிய வில்லைக கீழே எறிந்துவிட்டுப் புள்ளரசனைக் கட்டித்தழுவி மெய்ம்மறநது பூமியில் விழுந்து லக்ஷ்மணருடன் கதறத் தலைபபட்டார். இயற்கையில் அடங்கிய மனமுடையவராயினும், துன்பத்தின் மேற் றுன்பத்தால் இராமா அறிவு மீதூரப்பட்டவராயினர். அடிக்கடி பெருமூச் செறிந்து கஷ்டததோடு மூச்சு விட்டுக்கொண்டு குற்றுயிராய்க் கிடககும் ஜடாயுவை இராமா பார்ததுப் பெருந துயரடைந்து லக்ஷ்மணரை நோக்கி "நான் நாட்டையிழந்து காட்டில் வசித்துக்கொண்டிருக்கிறேன்; சீதையைப் பறிகொடுத்து விட்டேன்; இந்தப் பறவையும் என் னிமித்தம் உயிரிழந்தது. இவ்விதமாக எனக்கு நேர்நத துன்பங்கள் நெருப்பைக்கூட எரித்து விடும். என்னுடைய துயரங்களைத் தணிப்பதற்காக நான் சமுத்திரததில் இறங்கினால் என் துன்பம் அந்தச் சமுத்திரத்தைக்கூட வற்றச்செய்துவிடும். இவ்வுலகத்தினுள்ள தாவரசங்கமங்களுக்குள் என்னைப்போன்ற துரதிர்ஷ்ட முளளவன் ஒருவனுமில்லை. ஆகையாற்றான், இப்பொழுது இப்பெருந் துயரத்தை நான் அடைந்தேன். என் தந்தைக்குத் தோழரான இவ்வெருவை வேந்தர் என் காலத்தின் கொடுமையால் உயிரிழந்து பூமியில் கிடக்கின்றார்" என்று கூறினர். இவ்விதமாகவும் இன்னும்

இராமா புலமபல.

பலவிதமாகவும் புலம்பிக்கொண்டு இராமர் தமது தந்தை மேல் வைத்திருந்த அன்பால் அப்பறவை வேந்தனைத் தடவினார். சிறகு சிதைந்து இரத்தந் தோய்ந்து கிடக்கும் ஜடாயுவை இராமர் தழுவி "என் உயிருக்கொப்பான சீதை எங்கே போய்விட்டாள்" என்று சொல்லிக் கொண்டு பூமியில் விழுந்தார்.

அறுபத்தெட்டாஞ்சருக்கம்.

ஜடாயுவைத் தகனஞ்செய்தல்.

எல்லா உயிரிடத்தும் அன்புள்ள இராமர் இராவணனால் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்து கிடந்த ஜடாயுவைப்பார்த்து, லக்ஷ்மணரைநோக்கி "என்நிமித்தம் இந்தப் பறவை இராவணனால் கொல்லப்பட்டு உயிரை இழந்தது. அதன் உயிர் மிகமெலிந்து சிறிது மாத்திரமே தேகத்தில் தங்கி நிற்கிறது; குரல் விழுந்துவிட்டது; கண்கள் பார்வை குன்றிவிட்டன" என்று கூறிக் கழுகரசனை விளித்து "ஓ ஜடாயு, உமக்கு நன்மையுண்டாகுக. கூடுமாயிருந்தால் இராவணன் சீதையை எவ்வாறு கவர்ந்து கொண்டு போயினானென்றும், உம்மை எவ்வாறு கொன்றானென்றும் சொல்லும். இராவணன் சீதையை ஏன் களவாக எடுத்துக்கொண்டு போனான்? அவன் என் அரிய நாயகியைக் கவர்ந்து கொண்டுபோக நான் அவனுக்கு என்ன குற்றஞ் செய்தேன்! அவன் அவ்வாறு அவளைக் கொண்டுபோகும்பொழுது சந்திரனுக்கொப்பான அவளுடைய அழகிய முகம் எவ்வாறிருந்தது? ஓ பறவை வேந்த, அவள் அப்போது என்ன சொன்னாள்? அவ்வரக்கனுடைய பலம் என்ன? அவனுடைய உருவம் எவ்வாறிருக்கும்? அவன் செயல் யாது? அவன் வசிப்பது எங்கு? பெரியோய், சொல்லும்" என்று

இராமர் ஜடாயுவை இராவணனைப்பற்றி வினவல்.

கேட்டார். இவ்வாறு எளியோர் போலப் புலம்பும் இராமரை நோக்கித் தருமாத்துமாவாகிய ஜடாயு மிக நுணுகிய குரலால், "மாயையால் பெருங் காற்றும் பெருமழையும் உண்டுபண்ணி, ராக்ஷஸேஸ்வரனாகிய இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனான். நான் களைத்துவிட்ட சமயத்தில் என்னுடைய இறக்கைகளிரண்டையும் வெட்டிவிட்டு அவன் சீதையை எடுத்துக்கொண்டு தென்திசைக் கேகினான். ஓ ராகவ, எனது பிராணன் போகப்போகிறது. எனது கண்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. என் கண்முன் இலாமிச்சம் வேர் போன்ற மயிர்களையுடைய பொன் மரங்கள் தோன்றுகின்றன. பொருளை இழந்தவன் திரும்பி அடைதற்கேற்ற முகூர்த்தத்தில் இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போயினான். இந்த முகூர்த்தத்திற்கு விந்தம் என்று பெயர்; இதை இராவணன் அறியான். இந்த முகூர்த்தத்தில் ஒரு பொருளைக் கவர்ந்தவன் தூண்டிலைக் கவ்வின மீன்போல் விரைவில் மாண்டுபோவான். ஆகையால், சீதையை மீட்டுக்கொள்வதைப்பற்றிச் சிறிதும் சந்தேகம்வேண்டாம். இராவணனைப் போரில் வதைத்து நீர் சீக்கிரம் சீதையைக் கூடிச் சந்தோஷமடைவீர்" என்று கூறினார். அப்போது கழுகரசனான ஜடாயுவின் வாயிலிருந்து மாமிசத்துடன் இரத்தம் வழிந்தது. பிராணன் போகும் அத்தருணத்திலும் ஜடாயு அறிவு கெடவில்லை. "இராவணன் விச்சிரவஸின் குமாரன், வைச்சிரவணன் தம்பி" என்று சொல்லி அவர் தமது அரிய பிராணனை விட்டார். அப்போது இராமர் கைகூப்பிக்கொண்டு ஜடாயுவை நோக்கி "கொஞ்சம் பேசும், கொஞ்சம் பேசும்" என்று பெயர்த்தும் பெயர்த்தும் கேட்டார். அப்படி அவர் கேட்டுக்கொண்டிருக்கும்போதே ஜடாயுவின் பிராணன் தேகத்தைவிட்டு ஆகாயத்திற் கிளம்பிற்று. அப்போது கழுகரசர்

ஜடாயு இராவணனை வெல்லுந்தன்மையை விட்டா எனல்.

தமது தலையைப் பூமியில் குத்திக்கொண்டு கால்களையும் உடலையும் நீட்டி உயிர்போய்ப் பூமியில் விழுந்தார். மலை போன்ற பெரிய உடலையும் சிவந்த கண்களையுமுடைய புள்ளரசர் மாண்டு விழுந்ததைக் கண்டு, இராமர் துக்கமடைந்து,

ஜடாயு மரணம்.

லக்ஷ்மணரைப்பார்த்து "அரக்கர்கள் சஞ்சரிக்கும் இந்தத் தண்டகாரணியத்தில் அநேக வருஷம் சுகமாக வசித்துக்கொண்டிருந்து கடைசியாய் இப்பொழுது இப்புள்ளரசர் மாண்டுவிட்டார். வெகுகாலம் ஒருவித குறைவுமின்றி வாழ்ந்து ஜடாயு இப்போது உயிர் துறந்தார். விதியைவெல்ல ஒருவராலும் முடியாது. பார் லக்ஷ்மணா, எனக்கு உபகாரமாகச் சீதையை மீட்கமுயன்ற ஜடாயு மிக்க பலசாலியாகிய இராவணனால் கொல்லப்பட்டார். பழமையாகிய பெரிய ராஜாதிகாரத்தைக் கைவிட்டு என்னிமித்தம் இப்புள்ளரசர் பிராணனை நீத்தார். இயங்குதிணைப் பொருள்களுள் பறவைகளுள்ளும் தர்மமும் வீரமும் சத்தியமுமுள்ளவர்களும் எல்லார்க்கும் புகலிடமானவர்களும் இருக்கிறார்கள். என்னிமித்தம் உயிரிழந்த இந்த ஜடாயுவிற்காக நான் துக்கப்படுகிறதுபோல சீதையை இழந்ததற்குக்கூட நான் துக்கப்படவில்லை. மிக்க புகழ்படைத்த தசரதரைப்போல இந்தப் புள்ளரசர் என்னால் பணிந்துபோற்றப்படத்தக்கவர். ஓ லக்ஷ்மணா, நீ விறகு கொண்டுவா. நான் தீமூட்டி அதனால் எனக்காக மாண்ட இப்புள்ளரசரின் உடலைத் தகனம் செய்கிறேன். சுமித்திரை புத்திர, பயங்கரமான முகத்தையுடைய அரக்கனால் கொல்லப்பட்ட இப்புள்ளரசரின் உயிரற்ற உடலை ஈமத்தில் ஏற்றி நான் தகனம்செய்வேன். பெரிய வலி படைத்த பறவைவேந்தே, என்னால் சம்ஸ்காரம்பண்ணி அனுப்பப்பட்டு, எப்போதும் தருமங்களைச் செய்பவர்களும் ஆகிதாக்கினிகளும் போர்க்களத்தில் புக அஞ்சாத வீரர்

இராமர் ஜடாயுவிற்காகத் துக்கப்படல.

களும் பூதானஞ்செய்பவர்களும் அடையும் பெரும் பதவியை நீர் அடைவீர்" என்றார். இவ்வாறு சொல்லித் தர்மாத்துமாவாகிய இராமர் துக்கமடைந்தவராய் ஈமத்தின் மேல் ஜடாயுவினுடலை வைத்து அவரைத் தமது உறவினனைப்போலத் தகனம் பண்ணினார். பின்பு, பலமுள்ள இராமர் லக்ஷ்மணருடன்காட்டுக்குச்சென்று கொழுத்த பெரிய மான்களைக் கொன்று அவைகளின் மாமிசத்தை எடுத்துப் பிண்டங்களசெய்து பசும் புல்தரையில் புல்லையுந் தழையையுங் கொண்டு பாயல்பண்ணி அதன்மேல் அப்பறவைக்குப் பிண்டம் போட்டார். பின்பு ஜடாயுவினுடைய உயிர் சுவர்க்கம் சேருவதற்காக இராமர் பிராமணர்கள் ஓதும் மந்திரங்களை யோதினார். பிறகு அவ்விரு இராஜகுமாரர்களும் கோதாவரி நதிக்குச்சென்று ஸ்நானம்பண்ணி அவ்விடத்தில் சாஸ்திரப்பிரகாரம் கழுகரசனுக்குத் தர்ப்பணம் செய்தார்கள். புகழ்பெற்ற பெருஞ்செய்கை செய்து போரில் உயிரிழந்த கழுகரசனாகிய ஜடாயு முனிதுல்லியரான இராமரால் தகனம் முதலிய சடங்குகள் செய்யப்பெற்று மேலானபதவியை யடைந்தார். பறவை வேந்தனைத் தமது பிதாப்போலப் புத்திபண்ணி அவனுக்குத் தர்ப்பணம் செய்துவிட்டு இராமலக்ஷ்மணர்கள் தேவோத்தமர்களாகிய விஷ்ணுவையும் வாசவனையும்போலச் சீதையைத் தேடும் வண்ணம் காட்டினுள் நுழைந்தார்கள்.

ஜடாயுவை இராமர் தகனம்செய்தல்.

அறுபத்தொன்பதாஞ்சருக்கம்.

இராமலக்ஷ்மணர்கள் கவந்தனைக் காணுதல்.

அவ்வாறு ஜடாயுவுக்கு நீர்க் கடன் செய்துவிட்டு இராமலக்ஷ்மணர்கள் இருவரும் வில்பிடித்த கையர்களாய்ச் சீதையைத் தேடிக்கொண்டு அக்காட்டில் தென்

மேற்குத் திசையாகச் சென்றார்கள்; பின்பு தெற்கே திரும்பி ஜனங்கள் நடக்கப்பெறாத அரிய வழியொன்றை அடைந்தார்கள். அவர்கள் சென்ற காடு பெருஞ் சூழல்களும், மரங்களும், கொடிகளும் நெருங்கி நுழைதற்கரியதாய்ப் பார்ப்பதற்கு வெகு பயங்கரமாக விருந்தது. தென்புறமாகச் சென்று அந்தக் கொடிய பாழ்ங்காட்டை ரகுகுலோத்தமர்களான இராமலக்ஷ்மணர்களிருவரும் விரைந்து கடந்து ஜனஸ்தானத்திலிருந்து மூன்று குரோச தூரத்திலுள்ள அடர்ந்த கிரௌஞ்சாரண்ணியத்தைக் கிட்டினார்கள். அக்காடு மேகக் கூட்டங்களைப்போல் இருள்செறிந்து, எங்கே பார்த்தாலும் புன்னகை கொள்வது போல பலவிதமான அழகிய பூக்கள் பொலிந்து, பலவித பறவைகளும் விலங்குகளும் நிரம்பியிருந்தது. அவர்கள் சீதையை யிழந்த துயரத்தால் [illegible] ஆங்காங்கு உட்கார்ந்து அக்காடு முழுதும் அவளைத் தேடினார்கள். அவ்விரு சகோதரர்களும் அன்று மூன்று குரோசதூரம் கிழக்கே சென்று கிரௌஞ்சாரண்ணியத்தைக் கடந்து மதங்காச்சிரமத்தைக் கண்ணுற்றார்கள். பலவித மரங்களும் அடர்ந்த புதர்களும் நெருங்கி, அநேக மிருகங்களும் பறவைகளும் மலிந்துள்ள அப்பயங்கரமான காட்டைக் கடந்தபின் ஒரு மலையின்மேல் பாதாளம்போல ஆழ்ந்து எப்பொழுதும் இருள் செறிந்திருந்த குகை யொன்றை அவ்விரு ராஜகுமாரர்களும் கண்டார்கள். அதற்குச் சமீபத்தில் அவர்கள் செல்லும்போது அங்கே தீரமில்லாத ஏழைச் சனங்களுக்கு மிக்க பயத்தை யுண்டாக்குவதும் பார்ப்பதற்கு அருவருப்பானதும் பயங்கரமானதுமான பெரிய வடிவத்தை உடையவளும், கூரிய பற்களும் சரிந்த பெரிய வயிறும் கடின சரீரமு முடையவளும், கோர மிருகங்களைப் புசிப்பவளும், பயங்கரமான விரிந்த கூந்தலை யுடையவளுமான ஒரு கொ

கிரௌஞ்சாரண்ணியம் [illegible]

மதங்காசிரமம் காண[illegible]

டிய அரக்கிநின்றாள். அவ்விருவர்களையும் கண்டவுடன்,

அயோமுகி வரவு.

அவள் வேகமாக ஓடிவந்து "வா, நாம் இருவரும் விளையாடலாம்" என்று சொல்லி இராமருக்கு முன்னர்ச் சென்றுகொண்டிருந்த லக்ஷ்மணரைக் கைப்பற்றினாள். அவள் லக்ஷ்மணரைக் கட்டிக்கொண்டு "என்பெயர் அயோமுகி; நாத, நான் உம்மேல் காதல்கொண்டது உமக்குப் பெரிதும் நல்லது. வீர, மலை முழைஞ்சுகளிலும், ஆற்றோரங்களிலும், என்னோடெப்போதும் விளையாடிக்கொண்டிரும்" என்றாள். அவ்வண்ணம் அவள் சொல்ல, பகைவரேறுகிய லக்ஷ்மணர் கோபமடைந்து வாளை ஓங்கி அவளுடைய மூக்கையும் காதையும் முலையையும் வெட்டித் தள்ளினார். இவ்வாறு மூக்கும் காதும் அறுபட்ட பயங்கரமான தோற்றத்தையுடைய அவ்வரக்கி கதறிக்கொண்டு வந்த வழியே ஓடினாள். அவள் ஓடினபின் இராமலக்ஷ்மணர்கள் விரைந்து சென்று ஒரு அடர்ந்த காட்டை அடைந்தார்கள். அப்போது மிக்க புகழும், சத்தியமும், நல்லொழுக்கமுமுள்ள லக்ஷ்மணர் வெகு பராக்கிரமமுள்ள இராமரைப் பார்த்துக் கைகூப்பி; "ஐய, எனது இடக்கை துடிக்கிறது.

அபசகுனம் உண்டாதல்.

மனம் கலக்கமுறுகின்றது. வேறு பல அபசகுனங்களும் உண்டாகின்றன. ஆகையால், தாங்கள் இப்போதே உடை தரித்துக்கொண்டு தங்கள் நன்மையை எண்ணி நான் சொல்லுகிறபடி நடந்துகொள்ளும். இந்த அபசகுனங்களால் நமக்கு ஒரு தீங்கு சீக்கிரம் நேரிடும் என்று எண்ணுகின்றேன். ஆயினும், ஓ ராகவ, இக்கொடிய வஞ்சுளன் செய்கின்ற பயங்கரமான சத்தத்தால் நமக்கே இதில் வெற்றி கிடைக்கும் என்று தோன்றுகிறது" என்று சொன்னார். அப்பால் அவர்கள் அந்தக்காடு முழுதையும் தேடும்பொழுது காட்டை ஒடிப்பதுபோன்ற ஒரு பெரும் சத்தமுண்டாயது. அதனை நான்குபுறத்திலும் ஒரு

பெருங் காற்றுச் சூழ்ந்துகொண்டது. காடு முழுதும் நிறைந்து ஒரு பேரிரைச்சல் கேட்டது. அச்சத்தம் எங்கிருந்து வந்ததென்று உற்று நோக்கின இராமலக்ஷ்மணர்கள் மிக்க பெரிய உருவத்தையும் பெரிய தொடை யையுமுடைய அரக்கனொருவனைக் கண்டார்கள். அவர்களுக்கு முன் தோன்றிய அவ்விராக்ஷசனுடைய ரூபம் தலையற்ற கபந்தமாய் வயிற்றில் வாயுடையதாயிருந்தது. அவனுடைய உடலம் கூரிய மயிர்கள மூடி ஒரு பெரிய மலைபோன்றிருந்தது. அவன் நிறம் கார்மேகம்போன்றிருந்தது; குரல் மேக முழக்கம்போன்றிருந்தது. அவனுடைய விசாலமான கொடிய ஒற்றைக்கண் மார்பிலுள்ள நெற்றியில் தீப்போல் எரிந்துகொண்டிருந்தது. பெரிய இமைகள் மஞ்சள் நிறமுள்ளவைகளா யிருந்தன. வாய் மிகவும் அகன்றதாயும் பெரிய பல்வரிசைகளை யுடையதாயுமிருந்தது. அந்தப் பயங்கரமான வாயை அவன் நாக்கைநீட்டி அடிக்கடி நக்கிக்கொண்டிருந்தான். அவ்வரக்கன் யோசனை தூரம் தனது இரண்டு கைகளையும் நீட்டி அவற்றிற்குள் அகப்பட்ட மான் கரடி சிங்கங்களைப் பிடித்துப்புசித்தான். மற்ற மிருகங்கள் பக்ஷிகளை யெல்லாம் கையாற் பிடித்தெறிந்து கொண்டிருந்தான். அவன் வழியை மறித்து இராமலக்ஷ்மணர்கள் வரவை எதிர்பார்த்திருந்தான். அவர்கள் ஒரு குரோசதூரஞ் சென்று கைகளினால் மிருகங்களை எல்லாம் வழிமறித்துத் தடுத்துக்கொண்டிருக்கிற பயங்கரமான கோரரூபமுள்ள கவந்தனைக் கண்ணுற்றார்கள். அப்போது கவந்தன் தனது பெரிய கைகளை நீட்டி இராமலக்ஷ்மணர்களைப் பிடித்துத் தனது பலத்தினால் நெரித்தான். அவன் கையில் சிக்கி வாளும் வில்லுமேந்திய பெருந்தோள்களையுடைய மகா பலவான்களாகிய இராமலக்ஷ்மணர்கள் நலிவடைந்தார்கள். இராமர் சூரத்துவமும் பொறுமையு முடையவராதலால் அதிகம் வருந்தவில்லை; லக்ஷ்மணர் சிறுபிள்ளைய

கவந்தனை எதிர்ப்படல.

கவந்தன் கையில் அகப்படல்.

கையாலும் பொறையின்மையினாலும் மிகவும் துன்பம் அடைந்தார். லக்ஷ்மணர் அதிக துயருற்றுத் தமையனாரைப் பார்த்து "வீர, என்னைப்பாரும்; நான் இவ்வரக்கன் கையில் சிக்கிக்கொண்டேன். என்னை விட்டுவிட்டு, ஓ ராகவ, நீர் தப்பித்துக்கொள்ளும். என்னைப் புலியாகக் கொடுத்துவிட்டு நீர் சுகமாகத்தப்பித்துக் கொள்ளும். நீர் சீக்கிரம் சீதையை யடைந்து நமது பழைய இராச்சியத்தையும் நிச்சயமாகப் பெற்றுக்கொள்விரென்று நான் எண்ணுகிறேன். ஓ காகுத்த, நீர் அப்படிச் சிம்மாசனமேறின போது என்னை மறவாதிருக்க" என்றார். லக்ஷ்மணர் இவ்வாறு சொல்ல, இராமர் அவரைப்பார்த்து "வீர, வீணில் அஞ்சற்க. உன்னைப்போன்ற வலியுள்ளவர்கள் ஒருபோதும் பயத்தால் நலியமாட்டார்கள்" என்றார். அப்போது அந்தக் கொடிய பெருந்தோள்களையுடைய அரக்கனாகிய கவந்தன் இராமலக்ஷ்மணர்களை நோக்கி "எருதின் கழுத்தைப்போன்ற கழுத்தையுடையவராய்ப் பெரிய வாளும் வில்லுமேந்திய நீவிர் யாவர்? இந்தப் பயங்கரமான இடத்துக்கு வந்து என் கண்ணில் காணப்பட்டுவிட்டீர்கள். இவ்விடத்தில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? எதற்காக இவ்விடம் வந்தீர்கள்? இங்கே பசியால் வருந்திக்கொண்டிருக்கும் என்னிடம் நீங்கள் விற்களையும் கத்திகளையும் அம்புகளையும் ஏந்திக்கொண்டு கூரிய கொம்புள்ள இரண்டு ரிஷபங்கள் போல வந்திருக்கிறீர்கள். என்னை விரைந்து கிட்டியபின் நீங்கள் உயிர் பிழைப்பது கஷ்டம்" என்றான். கொடியனாகிய கவந்தன் இவ்வாறு கூற இராமர் முகம் வாடி லக்ஷ்மணரைப் பார்த்து "உண்மையான பராக்கிரமமுடையவனே, நமக்கு ஒன்றன்பின் ஒன்றாய்ப் பெருந்துக்கங்கள் விளைந்துகொண்டிருக்கின்றன. உயிர் போதற் கேதுவாகிய பெருந்துக்கம்

லக்ஷ்மணர் இரங்கல்.

கவந்தன் நீங்கள் என்கையினால் யாவர் என்றல்.

சீதையை நாமிழந்ததனால் முன்னரே நமக்கு உண்டாகி யிருக்கிறது. ஓ லக்ஷ்மணா, விதியிற் பெரிய வலியுள்ளது யாது? உன்னையும் என்னையும் விதியின் வலியால துக்கம் வந்து சேர்ந்துகொண்டதுகாண். அதைத் தடுக்க முடியாதென்பது நிச்சயம். பிராணிகளைத் துக்கத்திற்குள்ளாக்குவது விதிக்குக் கஷ்டமன்று. விதியின் வலியால் வச்சிரகவசமணிந்த பெரிய வீரர்களும் மணலால் கட்டப்பட்ட அணை போல அழிந்து விடுகிறார்கள்" என்றார். இவ்வாறு திட்பமும் உண்மையும் பராக்கிரமமு முடைய பெரிய புகழ் பெற்ற இராமா லக்ஷ்மணருக்குக் கூறித தமது புத்தியின் வலிமையால் தம்மனத்தைத் தேற்றிக்கொண்டார்.

இராமா தெளிவடைதல.

எழுபதாஞ்சருக்கம்.

கவந்தன இராமலக்ஷ்மணாகளை அறிந்துகொணடது.

கவந்தன் தனது கைகளுள்ளகப்பட்ட இராமலக்ஷ்மணர்களைநோக்கி "ஓ க்ஷத்திரியோத்தமர்களே; நான் பசியாயிருப்பதைப் பார்த்து நீங்கள் இங்கே நிற்கிறீர்களா? அறிவிழந்த நும்மை விதி எனக்கு உணவாகக் கொண்டுவந்து சேர்த்துளது" என்றான். இதைககேட்ட லக்ஷ்மணர் மிகவும் வருத்தமடைந்து தமது பேராற்றலைக் காட்டவேண்டி இராமரை நோக்கி "இக்கொடிய அரக்கன் எங்களிருவரையும் பற்றிக்கொள்வான். அதற்குமுன் நாங்கள் விரைந்து வாளினல் இவனுடைய பெருங்கைகளிரண்டையும் வெட்டுவோம். இத்தப் பெரிய பயங்கரமான உருவத்தையுடைய ராக்ஷசன் தனது தோள்வலியைக்கொணடே இவ்வுலகத்தை யெல்லாம் வெற்றிகொண்டு நம்மையும் இப்போது கொல்லக்

லக்ஷ்மணா கவந்தன் கையை வெட்டுவோ மெனல.

கருதுகிறன். யாகத்திற்குக் கொண்டுவரப்பட்ட பசுப்போலத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடாதவர்களைக் கொல்வது க்ஷத்திரியர்களுக்கு நிந்தையாகும்" என்று அச்சமயத்திற்குத் தக்க வார்த்தைகளைச் சொன்னர். இவர்களிவ்வாறு பேசுவதைக் கேட்ட கவந்தன் கோபங்கொண்டு வாயைத்திறந்து அவர்களை விழுங்க முயன்றன். உடனே இராமலக்ஷ்மணர்கள் காலத்தையும் இடத்தையும் நோக்கி வெகுசந்தோஷமாகித் தங்களுடைய வாளினல் கவந்தன் தோள்களிலிருந்து அவனுடைய கைகளை வெட்டித் தள்ளினர்கள். வலப்பக்கத்தில் நின்ற இராமர் அவனுடைய வலக்கையை ஒரு கணப்பொழுதினுள் வெட்டினர்; வீரராகிய லக்ஷ்மணரும் அப்படியே அவனுடைய இடக்கையை வெட்டினர். கைகள் வெட்டுண்ட கவந்தன் மேக முழக்கம்போலப் பெருங் கூச்சலிட்டு ஆகாசம் பூமி எண்டிசைகளாகிய எவ்விடத்துங் கேட்கக் கதறிக்கொண்டு பூமியில் விழுந்தான். கைகள் வெட்டுண்டு தனது தேகமெல்லாம் இரத்த வெள்ளம்பெருக நின்ற அரக்கன் அவர்களைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று பரிந்து கேட்டான். இவ்வாறு கவந்தன் கேட்க அழகான லக்ஷணங்கள் அமைந்த லக்ஷ்மணர் அவனுக்கு ராகவரைப் பற்றிச் சொல்லலுற்று "இவர் இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றி இராமர் என்று பெயர்பெற்றவர். நான் அவருடைய தம்பி லக்ஷ்மணன். அரசனகமுடிசூட்டப்படப்போகும்போது தாயாரால் சதிசெய்யப்பட்டு அவர் எல்லாவற்றையுந் துறந்து தன் மனைவியோடும் என்னேடும் காட்டிற்கு வந்துவிட்டார். அடர்ந்த காட்டில் வசித்துக்கொண்டிருக்கும்பொழுது தெய்வப்பெண்போன்ற இவருடைய மனைவியை ஒரு அரக்கன் தூக்கிக்கொண்டு போய் விட்டான். அவளைத் தேடிக்கொண்டு நாங்கள் இங்குவந்

கந்தன் கையை வெட்டல.

லக்ஷ்மணர் கவந்தனுக்குத் தம் வரலாறு கூறல.

தோம். நீ யார்? துடைகள் முரிந்து வாய் மார்பில் அமைக்கப்பட்டு இக்கவந்த உருவத்துடன் நீ ஏன் இக்காட்டில் வசித்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். இவ்வாறு லக்ஷ்மணர் நல்லவார்த்தையால் கேட்க, கவந்தன் சந்தோஷமடைந்து இந்திரன் சொற்களை நினைத்துக்கொண்டு அவர்களைபபார்த்து "புருஷோத்தமர்களே, உங்களுடைய வரவு நல் வரவாகுக. என்னுடைய பாக்கியத்தினால் நான் உங்களைக் கண்டேன். என்னுடைய நல்வினையினாலேயே நீங்கள் என் இரண்டு கைகளையும வெட்டினீர்கள். நான் எவ்வாறு என் அகந்தையால் இந்த விகாரமான ரூபததை அடைந்தேனென்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்றான்.

எழுபத்தொன்றாஞ்சருக்கம்.

கவந்தன் தன் வரலாறு கூறுதல.

கவந்தன் கோர ரூபமடைந்த வரலாறு.

"பெருந்தோள்களையும் பேராற்றலையு முடைய இராம, இந்திரனையும் சந்திராதித்தியர்களையும் போன்ற சொல்லமுடியாத என் அழகினால் நான் முன் மூவுலகங்களிலும் கீர்த்தி பெற்றிருந்தேன். நான் அந்த அழகிய ரூபத்தை யொழித்துக் கோரரூபங்கொண்டு எத்திசைகளிலும் காடடில் வசிக்கும் ரிஷிகளைப் பயமுறுத்திக்கொண்டு வந்தேன். அப்படிச் செய்து வரும்பொழுது ஒருநாள் நான் இந்தக் கோரரூபத்தைத் தரித்துக் காட்டில் பழம் பறித்துக்கொண்டிருந்த ஸ்தூலசிரசென்ற பெரிய முனிவரைப் பயமுறுத்தினேன். அவர் கோபங்கொண்டு "மனிதர் எல்லாராலும் வெறுக்கப்படும் இக்கோர ரூபத்தை நீ அடையக்கடவாய்" என்று என்னைச் சபித்தார். நான் அவரை வணங்கி என் சாப விமோச

வத்திற்கிரகப் பிரார்த்திக்க, அவர் "இராமர் உன் கைகளை வெட்டி உன்னை ஒரு பெரிய காட்டில் தகனஞ் செய்யும்போது நீ உன் அழகான உருவத்தை அடையக்கடவாய்" என்றார். ஓ லக்ஷ்மண, நான் தனுவினுடைய குமாரன். போர்க்களத்தில் இந்திரனிட்ட சாபத்தினால் நான் இந்த உருவம் அடைந்தேன். நான் பிரமனைக் குறித்துத் தவமபுரிந்து அவரைச் சந்தோஷப் படுத்தித் தீர்ககாயுசு பெற்றுக்கொண்டேன். அதனால் செருக்கடைந்து தீர்க்காயுசுபெற்ற என்னை இந்திரன் என்ன செய்வான் என்று அவனோடு போர்புரிந்தேன். அப்போது அவனால் எறியப்பட்ட சதகோடியாகிய வச்சிராயுதத்தினால் எனது துடைகள முரிநது தலை உடலுக்குள் புதைந்தது. அது கண்டு நான் என் உயிரை வாங்கிவிடும்படி கேட்டும் அவன் என்னை யமலோகத்திற் கனுப்பவில்லை; "பிரமதேவர் கொடுத்த வரம பொய்யாகாது" என்று மாத்திரம் சொன்னான். அதற்கு நான் "உன் வச்சிராயுதத்தினால் அடிபட்டு என் தலையும் துடையும் வாயும் நொருங்கியுளேன்; உணவின்றி நான் எவ்வாறு நெடுநாளைக்கு உயிரோ டிருப்பேன்" என்றேன். அது கேட்டு இந்திரன் என்கைகளை யோசனை நீளமுள்ளவைகளாகச் செய்து கூரிய பற்களை யுடைய என் வாயை வயிற்றில் வைத்தான். அன்றுதொட்டு நான் என் நெடிய கைகளை நீட்டிக் காட்டில் வாழும் சிங்கம், புலி, மான், நரிகளைப் பிடித்துப் புசித்துக்கொண் டிருந்தேன். இந்திரன் "இராமலக்ஷ்மணர் உன் கைகளைப் போரில் வெட்டின போது நீ சுவர்க்கம அடைக" என்றான். ஐயா ராஜோத்தமனே, என்னுடைய உடலைப் போக்கவரும் இராமர் எனது கைக்குள் நிச்சயமாய் அகப்படுவார் என்ற நம்பிக்கையினால் நான் இந்தக்காட்டில் எதிர்ப்படும் ஒவ்வொரு மிருகங்களையும் சந்தோஷத்தோடு பிடித்துக்கொண்டு

கவந்தன் தலையற்ற வரலாறு.

ருந்தேன். அந்த இராமர் நீரே. ஓ ராகவ, உமக்கு நன்மை யுண்டாகுக. இராமர் அன்றி வேறெவராலும் என்னைக் கொல்ல முடியாதென்று அம்மாமுனி உண்மையாகச் சொன்னார். உம்மால் தகனம் பண்ணப்பட்டபின் நான் நீர் யாருடன் சிநேகம் செய்யவேண்டும் என்று நல்ல புத்திகள் சொல்வேன்" என்று தநுவின் குமாரன் சொல்ல, மகாத்துமாவாகிய இராமர், லக்ஷ்மணர் கேட்கும் படியாக, அவனை நோக்கி "நானும் என் தம்பியும் ஜன ஸ்தானத்தி லில்லாதிருந்த சமயம் பார்த்து எனது புகழ் பெற்ற மனைவி சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அவன் பெயர்மாத்திரம் தெரியுமே அன்றி அவன் தோற்றம், இடம், வலி முதலியவைக ளொன்றும் எனக்குத் தெரியாது. இவ்வாறு துக்கத்தி லாழ்ந்து அநாதைகளாக அலைந்துகொண்டு திரிபவர்களும பிறருக்கு எப்போதும் நன் மையே புரிபவர்களுமாகிய எங்களுக்கு நீ தயவுசெய்யத தகும். வீர, நாங்கள் யானைகளால் முறிக்கப்பட்டு உலர்ந்திருக்கும் கட்டை களைக் கொண்டுவந்து பெருங்குழியில போட்டுத் தீமூட்டி உன்னைத் தகனம்செய்கிறோம். சீதையை எவன் கவர்ந்து சென்றான் என்றும் எங்கே கொண்டு போயினன் என்றும் உனக்குத் தெரிந்தால் அவசியம் எங்களுக்குச் சொல்லு" என்று கேட்டார். அப்போது பேசுவதில் வெகு சமர்த்தனான அரக்கன் அவரை நோக்கி "எனக் குத் திவ்விய ஞானம் இல்லை. அதனால் சீதை யிருக்குமி டத்தை அறியேன். உங்களால் தகனம்செய்யப்பட்டு என்னுடைய் சுயரூபத்தை அடைந்தபின் சீதையைப் பற்றி எல்லாம் சொல்லவல்லவ னொருவனை உங்களுக்கு நான் சொல்லுவேன். இந்தத் தேகம் எரிந்துபோம்வரை யில் சீதையைத் தூக்கிப்போன மகா வீரியம் பொருந் திய அரக்கனை இன்னான் என்று அறியும் ஞானம் எனக்

இராமர் கவந்தன் தயவிரகு வேண்டல்.

இல்லை. யான் சாபத்தினால் எனது ஞானத்தை இழந்து விட்டேன். என் கொடிய செயலால் எனக்கு இந்த விகாரரூபம் உண்டாயிற்று. சூரியன் தனது களைத்த பரிகளுடன் மேற்றிசையில் சென்று மறையுமுன் என்னைக் குழியில் தள்ளிச் சாஸ்திரப் பிரகாரம் தகனம் செய்யும். ஓ இராகவ, உம்மால் தகனம் செய்யப்பட்டதன்பின் அந்த ராக்ஷசனை அறிந்தவனொருவனை நான் உமக்குச் சொல்லுவேன். நற்குணமமைந்த அவனோடு நீர் நட்புச் செய்துகொள்ளும். அவன் உமக்குத் தகுந்த உதவி செய்வான். இந்த மூவுலகங்களிலும் அவனுக்குத் தெரியாத தொன்றில்லை. அவன் முன்னொருகாலத்தில் ஒருகாரணத்தால் மூவுலகங்களையும் சுற்றிவந்துளான்" என்றான்.

எழுபத்திரண்டாஞ்சருக்கம்.

கவந்தன் இராமருக்குச்
சுக்கிரீவனோடு நட்புச்செய்துகொள்ளும்படி கூறல்.

கவந்தன் இவ்வாறு கூறியபின் இராமலக்ஷ்மணர்கள் அவனை ஒரு மலைக்குகைக்குக் கொண்டுபோய்த் தகனம் செய்தார்கள். லக்ஷ்மணர் ஈமத்திற்கு நெருப்புவைத்தார். அது நாலுபக்கமும் நன்றாகப்பற்றி எரிந்தது. நெய்போல்வதாகிய கவந்தனுடைய பெரிய தசை செறிந்த சரீரத்தை அந்தத் தீ மெதுவாகத் தகனஞ்செய்தது. அதன்பின் அப்பெரிய ராக்ஷசன் ஈமத்தினின்றும் புகையற்ற அக்கினிப் பிழம்புபோல எழுந்து சுத்தவஸ்திரந் தரித்துத் திவ்விய மாலை யணிந்து விளங்கினான். அவன் நல்லாடை புனைந்து, அவயவங்களிலெல்லாம் ஆபரணங்கள் அணிந்து, வெகு சந்தோஷத்துடன் ஈமத்தினின்

கவந்தன் சுவரூபம் அடைந்தது.

றும் ஆகாயத்தில் எழுந்து, அன்னங்கள் பூட்டப்பட்ட புகழ்பெற்ற தேவவிமானத்தில் ஏறி, வானில் நின்று திக்குக்களையெல்லாம் தனது தேககாந்தியால் விளக்கஞ் செய்துகொண்டு இராமரைநோக்கி "ஓ இராகவ, யாதுகாரியம் செய்தால் நீர் உண்மையாய்ச் சீதையை அடையலாமென்பதைக் கேளும். உலகத்தில் அரசர்கள் தாம் விரும்பிய பொருள்களை யடையும் *உபாயங்கள் ஆறுள.

கவந்தன் இராமருக்குப் புத்திகூறல்.

ஒரு துன்பத்தை அநுபவிப்பவன் ஒத்த துன்பத்தை அநுபவிக்கும் மற்றொருவனைத் தனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும். ஓ இராம, உமக்கு மனைவியை யிழந்ததாகிய பெருந் துன்பம் நேரிட்டிருக்கிறது. ஆதலால் அப்படி மனைவியை யிழந்தவன் ஒருவனோடு நீர் நட்புச் செய்துகொள்ளல் தக்கது. செய்யாவிடின் உம்முடைய காரியம் சித்தி யாவதற்கு வேறு வழி நான் காணேன். ஓ இராகவ, நான் சொல்லுவதைக் கேளும். பம்பாசரசின் கரையிலுள்ள மலைகளுட் சிறந்த ரிசியமூக பர்வதத்தில் கோபங்கொண்ட இந்திரன் குமாரனான தன் தமையன் வாலியால் துரத்தப்பட்டு, வீரமும் அடக்கமுமுள்ள சுக்கிரீவன் என்னும் வானரத்தலைவன், நான்கு வானரர்களோடு, வசிக்கின்றான். மிக்க பலமும், கீர்த்தியும், சத்தியமும், தைரியமும், புத்தியும், சாமர்த்தியமும், பொறுமையும், பெருமையும், அழகும் வாய்ந்த அந்த வானரத் தலைவன், இராச்சியத்தின் பொருட்டுத் தன் தமையனால் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டான். ஓ வீர, அவன் உம்மோடு நட்பாகிச் சீதையைத் தேடுவதற்கு

சுக்ரீவன் வரலாறு.

* (1) சந்தி=நட்பாக்கல். (2) விக்கிரகம்=பகையாக்கல். (3) யானம்=பகைவன்மேல் படையெடுத்துச் செல்லுதல். (4) ஆசனம்=காலம் வரும் வரையில் காத்திருத்தல். (5) துவைதீபாவம்=பிரித்தல். (6) சமாச்ரயம்=கூட்டல்.

உதவி செய்வான். நீர் துக்கத்திலாழவேண்டாம். இக்ஷ்வாகு குலோத்தம, இவ்வுலகத்தில் விதியை வெல்ல ஒருவராலும் முடியாது. வீர, நீர் இப்போதே இங்கிருந்து புறப்பட்டு விரைந்து சென்று மகாபலவானாகிய சுக்கிரீவனை அடைந்து ஒருவருக்கொருவர் துரோகம்செய்யாமலிருக்கவேண்டி அக்கினிசாக்ஷியாக அவனோடு நட்புச் செய்துகொள்ளும். அவ்வானரவரசன் சுக்கிரீவன் மிக்க நன்றியுள்ளவன்; வேண்டு முருவம் எடுத்துக்கொள்ளும் வன்மையுள்ளவன்; உதவி தேடுபவன்; அதிக பலமுடையவன்; ஆகையால் அவனை இகழற்க. அவன் விரும்பிய காரியத்தை நீங்களிருவாகளும் செய்து முடிக்க வல்லீர்கள். அவன் உங்களால் உபகாரத்தை அடைந்திடினும் அடையாவிடினும் உங்களுடைய காரியத்தைச் செய்வான். அவன் ரிக்ஷரஜசென்கிற வானரனுடைய மனைவியினிடத்தில் சூரியனுக்குப் பிறந்தவன். அவன் வாலியால் பகைக்கப்பட்டு அவனிடத்துக் கொண்ட இடையீடிலாத பயத்தினால் பம்பாசரசின் கரையில திரிந்துகொண்டிருக்கிறான். நீங்கள் அக்கினிக்கு முன்பாக உங்களுடைய ஆயுதங்களை வைத்து ரிசியமூக பாவதத்தி லிருக்கும் அவ்வானரத் தலைவனுடன் நட்புச் செய்துகொள்ளுங்கள். அவன் நரமாமிச பக்ஷணிகளாகிய அரக்கர்களுடைய இருப்பிடங்களை எல்லாம் அறிந்தவன். ஓ பகைவரேறாகிய இராகவ, சூரியனுடைய கிரணங்கள் பிரகாசிக்கின்ற இடங்களுள் அவன் அறியாததொன்றுமில்லை. அவன் தனது குரங்குகளுடன் ஆறுகள், மலைகள், கோட்டைகள், குகைகள் எல்லாவற்றையும் தேடி உமது மனைவியைக் கண்டுபிடிப்பான். அவன் உம்மைப் பிரிந்த துக்கத்தால் வருந்தும் சீதையைத் தேட எத்திசைகளுக்கும் பெரிய உருவமுடைய வானரர்களை அனுப்புவான்; இராவணனுடைய இருப்பிடத்திலும் அவளைத் தேடுவான். மேருவின் உச்சியிலிருப்பினும் பாதாளத்திலிருப்பினும் [illegible]

னர்களை எல்லாம் அவ்வானரத்தலைவன் கொன்று குற்றமற்ற உமது மனைவியை உமக்கு மீட்டுக்கொடுப்பான்" என்றனன்.

எழுபத்துமூன்றாஞ்சருக்கம்.

கவந்தன் ரிசியமூக பர்வதத்திற்கு வழி கூறுதல்.

ரிசியமூக பர்வதத்திற்குச் செல்லும் வழியில் உள்ள மரங்கள்.

சீதையை அடைதற்கேற்ற வழியை இராமருக்கு நன்றாக எடுத்துக்கூறியபின் புத்தியுள்ள கவந்தன் மறுபடியும் அவரை நோக்கிப் பொருள்பொதிந்த சொற்களால் "இதோ மேற்குத்திக்கை அலங்காரம் செய்துகொண்டு காவல், வேங்கை, பலா, இறலி, ஆல், தும்பை, அரசு, கோங்கு, மா, நாகம், மஞ்சாடி, தமாலம், அசோகம், கடப்பு, அலரி, அக்கினிமுகம், பாரிபத்திரம் முதலிய மரங்கள் நிற்கின்றனவே, இதுதான் ரிசியமூக பர்வதத்திற்குப் போகும் வழி; அம்மரங்களிலேறியும், அவைகளை வளைத்தும், அவைகளின் அமுதனைய கனிகளைப் பறித்தருந்தி நீர் அம்மலைக்குப் போகலாம். இந்தக் காட்டைக் கடந்து சென்றால் தேவேந்திரனுடைய நந்தனவனம் போன்றதும் உத்தரகுருவை ஒத்ததும் குபேரனுடைய தோட்டமாகிய சைத்திரரதத்தைப்போல வருஷம் பன்னிரண்டு மாதமும் பழங்களையும் தேனையும் கொடுப்பதும் எல்லாக் காலத்திலும் எல்லாப்பருவங்களையுமுடையதும் பூத்த மரங்கள் நிறைந்துள்ளதுமான ஒரு காட்டை நீரடைவீர். அந்தக் காட்டில் மேகக்கூட்டம்போலவும், மலைகள்போலவும், பெரிய கிளைகளையுடைய அநேக மரங்கள் பழத்தின் பாரத்தால் வளைந்து அதிசிறப்பாக நிற்கும். அங்

மரங்களில் ஏறியும் கிளைகளை வளைத்தும் அமுதத்துக் கொப்பான பழங்களை லக்ஷ்மணர் பறித்துக்கொடுப்பார். வீரர்காள், காடுகளையும் மலைகளையும் சிறு குன்றுகளையும் ஒவ்வொன்றாகக் கடந்து சென்றால் நீங்கள் பரற்கற்களும் பாசியு மில்லாததும், அதனால் ஜனங்கள் விழுந்து ஆழ்ந்துபோகாததும், சமமான நீர்த்துறைகளையுடையதும், மணல்பாய்ந்ததும், செந்தாமரையும் வெண்டாமரையும் மலரப்பெற்றதுமாகிய பம்பை என்னும் பெரிய ஏரிகரையைச் சேருவீர்கள். அங்கே அன்னங்களும், தவளைகளும், கொக்குக்களும், உள்ளான்களும் காதிற் கினிய மனோகரமான ஓசைகளைச் செய்து விளையாடித்திரியும். அவைகள் அவ்விடத்தில் ஒருபோதும் கொலையுண்ணப்பட்டு வருத்தமடையாமையால் மனுஷர்களைக் கண்டு அச்சமடையா. ஓ இராகவ, இந்த வெண்ணெய்க் கட்டிபோன்ற பறவைகளும், ரோகிதம், சக்கரதுண்டம், நளம் என்னும் மீன்களும் உமக்கு உணவிற்காகும். இவைகளையன்றிச் செதிள், முள் முதலியவைகளில்லாத கொழுத்த பல மீன்களையும் உமது அன்புள்ள தம்பியாகிய லக்ஷ்மணர் தமது பாணங்களால் கொன்று நெருப்பிற் சுட்டு உமக்குக் கொடுப்பார். அவைகளை நீர் அருந்திய பின் உமக்குப் பானம்பண்ணுவதற்காக லக்ஷ்மணர் ஒரு தாமரையிலையில் மலர்களோடு பயின்றமையால் தாமரை மணம் வீசுவதும் இனிமையானதும் குளிர்ச்சியானதும் ஆரோக்கியகரமானதும் அழுக்கில்லாததும் வெள்ளியும் பளிங்கும்போல நிர்மலமானதுமான நீரைக் கொண்டுவந்து கொடுப்பார். நீர் அந்திக்காலத்தில் அவ்வேரிக்கரையில் உலாவும்போது லக்ஷ்மணர் கொழுத்த குரங்குகள் மலைக்குகையில் படுத்திருப்பதையும் காட்டில் ஓடித்திரிவதையும் உமக்குக் காட்டுவர். ஓ புருஷோத்தம, நீரும்

பம்பாசரசில வாழும் பறவைகள்.

மீன்கள்.

விலங்குகள்.

அந்தக் கொழுத்த குரங்குகள் தண்ணீர் குடித்துவிட்டு ஆற்றங்கரையில் தண்ணீர் குடிக்கவரும் எருதுகள்போலக் கத்துவதைக் காண்பீர். சாயங்காலத்தில் நீர் அவ்விடத்தில் உலாவிக்கொண்டு பம்பையின் அழகான ஜலத்தையும் பூத்தமரங்களையும் பார்த்துத துக்கத்தைப் போக்கலாம். அன்றியும், ஓ இராகவ, அங்கேயுள்ள பூத்துவிளங்கும் திலகமும், நற்றமாலமும், நன்றாக மலர்ந்த தாமரை குவளை முதலியவைகளும் உமது துபரத்தைப் போக்கும். அங்குள்ள புஷ்பங்களைப் பறித்துச் சூடிக்கொள்ளுவதற்கு அவ்விடத்தில் ஒரு மனுஷருமில்லை. அன்றியும் ஓ இராகவ, அவ்விடத்தில் மதங்கமா முனிவருடைய சிஷ்யர்கள் புலன்களை யடக்கித் தவம் செய்தமையால் அந்தப் புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் ஒருநாளும் வாடுவதில்லை. ஒரு சமயத்தில் அவர்கள் தங்கள் குருவாகிய மதங்கமுனிவருக்காகப் பறித்தெடுத்துவந்த பழங்களின் பாரத்தினால் அவர்கள் தேகத்திலிருந்து சிந்திய வேர்வைத்துளிகள் அவருடைய தவத்தின் மகிமையால் புஷ்பங்களாயின. இவ்வாறு வேர்வைத் துளியினின்று தோன்றியபடியாற்றான் அப்புஷ்பங்கள் வாடிப்போகிறதில்லை. ஓ காகுத்த, அவர்களுக்குத் தொண்டு செய்துகொண்டிருந்த சவரி என்னும் ஒரு தவமுதாட்டி இப்போதும் அங்கே வசித்துக்கொண்டிருக்கிறாள். ஓ இராம, எப்போதும் தருமமே செய்யும் அத்தவ மூதாட்டி கடவுளைப்போல எல்லாராலும் வணங்கப்படும் உம்மைத் தரிசனம்செய்தபின் சுவர்க்கம் அடையப்போகிறாள். ஓ காகுத்த, அப்பம்பையின் மேல்கரையில் மதங்கமுனிவருடைய அந்தரங்கமான நிகரற்ற ஆச்சிரமத்தை நீர்காணுவீர். அக்காட்டில் யானைகள் அதிகமாயினும் அத்தபோதனருடைய தெய்வீக

புஷ்பங்கள்.

சவரி வரலாறு.

மதங்க வனம்.

மான ஆற்றலுக் கஞ்சி ஒரு யானையாவது அவ்வாசசிரமததி னெல்லைக்குள் நுழை யாது. ஓ இராகவ, அந்தக்காட்டிற்கு மதங் கவனம் என்று பெயர். தேவர்களுடைய நந்தனவனத்துக் கொப்பானதும் அநேக பறவைகள் வசிப்பதுமாகிய அக் காடடில், ஓ இராம, நீா சநதோஷமாகத திரியலாம். அப்பம்பாசரசிறகு எதிரே பூதத மரஙகளையுடையதும் ஏறுவதற்கரியதும், சிறு பாம்புகளால் நான்கு பக்கத்தும் காக்கப்படுவதுமாகிய ரிசியமூக பருவத மிருக்கின்றது.

ரிசியமூக பாவதம.

அமமலை வளளன்மை மிக வுள்ளது; ஆதிகாலததில பிரமதேவரா லுண்டாக் கப்படடது. அம்மலையில படுதது உறங்கித் தனக்கு ஒரு புதையல கிடைததாகக் கனவு காண்பவன் கண் விழிததுக்கொண்டவுடனே அதனை அடைவான். அம்மலையை அடையும பாதகர்களையும நலலொழுக்க மற்றவர்களையும நிததிரைகொள்ளும்போது ராக்ஷசர்கள் பிடிததுக் கொன்றுவிடுவாாகள். பம்பைக்கரையிலுள்ள மதங்காசசிரமததில் திரியும் யானைக்கன்றுகளின் பயங் கரமான சததததை நீா கேடபீா. அன்றியும், வேக மாகச் செலலும மேகம்போன்ற கரிய மதயானைகள்

மதஙக வனததிலுளள யானைகள.

கபோலத்திலிருநது மதநீர் பாய அங்கு மிங்கும் தனிததும் கூட்டங்கூட்டமாயும் திரிவதை நீர் காண்பீர். காடடின்கண் வாழும் அந்தப் பெரிய யானைகள் பம்பாசரசுக்கு வந்து அதனுடைய இனிய தூய நறுமணங் கமழுகின்ற நீரை உண்டுவிட்டுப் பெயர்த்தும் அநதக் காடடுககே திரும்பிச் செல்லும். அங்கே கரடிகளையும், நரிகளையும், துன்பஞ் செய்யாதனவும் மனிதரைக் கண் டஞ்சாதனவுமாகிய இந் திரநீலம்போன்றமெல்லிய முகத்தையுடைய மான்களையும் கண்டு நீர் நுமது துயரத்தை ஒழிப்பீர். ஓ இராகவ, நான்கு பக்கங்களிலும் கருங்கற் பாறைகளால் சூழப்பட்டு

உட்புக வரியதாய் வாயிலில் பழந்தரு மரங்கள் சூழ்ந்ததும் குளிர்ந்த ஜலமுடையதுமாகிய அழகிய தடஞ்சுனை யொன்று பொருந்திய பெருங் குகையொன்று அந்த மலையிலிருக்கிறது. அக்குகையிலேதான் சுக்கிரீவன் தனது வானரத் துணைவர்களோடு வசிக்கிறான். அவன் சில சமயத்தில் அந்த மலையின் உச்சியிலும் இருப்பான்" என்றான். இவ்வாறு இராமலக்ஷ்மணர்களுக்குச் சொல்லிவிட்டுக் கவந்தன் சூரியன்போலப் பிரகாசித்துக் கொண்டு மாலையணிந்து அழகாக ஆகாசத்தில் விளங்கினான். அப்போது இராமலக்ஷ்மணர்கள் ஆகாயத்தில் நிற்கின்ற பெரிய கவந்தனை நோக்கி "நீர் போய்வாரும்" என்று சொன்னார்கள். அதற்கு மறுமொழியாக, கவந்தன் "நீங்கள் உங்கள் காரியத்தை முடிக்கப்போங்கள்" என்று சொல்லிச் சந்தோஷமடைந்த இராமலக்ஷ்மணர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போயினான். தனது பழைய அழகைப்பெற்று ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டு நின்ற கவந்தன் இராமருக்கு அவர் செல்ல வேண்டிய வழியைக் காண்பித்து "சுக்கிரீவனுடன் நட்புச் செய்துகொள்ளும்" என்று சொன்னான்.

கவந்தன் சுவர்க்கம் சென்றது.

எழுபத்துநான்காஞ்சருக்கம்.

சவரி சுவர்க்கமசென்றது.

இராஜ குமாரர்களான இராமலக்ஷ்மணர்கள் பம்பாசரசிற்குப் போவதென்று கவந்தன் காட்டின வழியாகச் சென்று மேற்கு நோக்கிப் போனார்கள். சுக்கிரீவனைக் காணவேண்டி வழிக்கொண்டு செல்லும்பொழுது

அவர்கள் மலைகளினுச்சியில் பூக்கள் நிறைந்தனவும் தேன் போன்ற கனிகள் மலிந்தனவுமான அநேக மரங்களைக் கண்டார்கள். அவர்கள் அன்றிரவை ஒரு மலையின் உச்சியில் கழித்து மறுநாள் பம்பையின் மேற்குக்கரை சென்று சேர்ந்து சவரியினுடைய அழகிய ஆச்சிரமத்தைக் கண்ணுற்றார்கள். அவர்கள் நான்குபுறத்தும் மரங்கள் சூழ்ந்து அழகாக விளங்கும் அவ்வாச்சிரமத்துள் நுழைந்து சுற்றிப் பார்த்துத் தவமூதாட்டியாகிய சவரியைக் கண்டார்கள்.

இராமலக்ஷ்மணர் சவரியைக் காணல்.

முற்றத் துறந்த அந்தத் தவமூதாட்டி இராமலக்ஷ்மணர்களைக் கண்டவுடன் எழுந்து கைகூப்பி அவர்களுடைய தாள்களில் வணங்கி அவர்களுக்கு முறைப்படி பாத்திய ஆசமனீயங்களை வழங்கினாள். இராமர் தரும நெறியில் நின்ற அத்தவ மூதாட்டியைநோக்கி "பணிமொழி, தவத்துக்கு இடையூறுகளாக உள்ளவைகளெல்லாவற்றையும் நீ ஒழித்துவிட்டாயா! நினது தவம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகின்றதா? நீ கோபத்தை நீக்கி உணவை சுருக்கிக்கொண்டாயா? செய்ய வேண்டிய நோன்புக ளனைத்துஞ் செய்தாயா? மனோசுகம் அடைந்தாயா? நீ நின் ஆசாரியருக்குச் செய்த தொண்டு பயனடைந்ததா?" என்று வினவினார். இராமர் அவ்வாறு கேட்டபோது சித்தர்களால் நன்குமதிக்கப்பட்ட முற்றுப்பெற்ற தவத்தையுடைய சவரி மூதாட்டி இராமரைக் கிட்டி "ஓ புருஷோத்தம, தேவாதிதேவராகிய உம்மைப் பூஜித்ததால் நான் சுவர்க்கம் புகுகின்றேன். உம்முடைய தரிசனம் கிடைக்கப்பெற்றமையால் என் தவம் பயனடைந்தது; என் பிறவி வாழ்வுற்றது; நான் ஆசிரியர்களுக்குச் செய்த தொண்டு பயனடைந்தது; என் தவமும் முற்றுப்பெற்றது. ஓ பெரியோய், பகைவரேறே, மனுடர்க் கருள்செய்பவனே, உம்முடைய அருணோக்கத்தினால் யான் தூய்மை யடைந்து அழிவில்

லாத புத்தேளுலகம் புகுவேன். நான் தொண்டு புரிந்து வந்த தபோதனர்கள் நீர் சித்திரகூடம் வந்து சேர்ந்த போது ஒப்பற்ற ஒளியினையுடைய தேவ விமானங்களி லிவர்ந்து விண்ணுலகம் புக்கனர். தருமத்தை யறிந்த அப்பெரியோர்கள் அப்போது என்னைப் பார்த்து "இராமர் உன்னுடைய ஆச்சிரமத்துக்கு வருவார். அவரையும் லக்ஷ்மணரையும் மிகுந்த பத்தியோடு உபசாரஞ் செய். அவருடைய தரிசனத்தினால் நீ அழியாத சுவர்க்கலோகம் புகுவாய்" என்றார்கள். ஓ புருஷோத்தம, இவ்வாறு அந்தப் பெரிய தபோதனர்கள் எனக்குச் சொன்னார்கள். நான் தங்களுக்காகப் பம்பைக் கரையி லுண்டாகிய பல கனிகளைச் சேர்த்துவைத்திருக்கிறேன்" என்று இவ்வாறு சொன்னாள். தருமாத்துமா வாகிய இராமர் முக்காலங் களையு மறிந்த சவரியைப்பார்த்து "உன்னுடைய தவத்தி னாற்றலையும் உன்னுடைய ஆசிரியர்களது தவத்தினாற் றலையும் தனு சொலல நான் கேட்டிருக்கிறேன். உனக்கு விருப்ப மதுவாயின் அதை நான் இப்பொழுது என் கண்களால் பார்க்க விரும்புகிறேன்" என்றனர். இவ்வாறு இராமர் கூறக் கேட்ட சவரி அந்தப் பெருங் காட்டை

சவரி மதங்க வனத்தை இராமருக்குக் காட்டல.

அவர்களுக்குக் காடடலுற்று "ஓ இராகவ, மிருகங்களும் பறவைகளும் நிரம்பி அடர்ந்த மேகம்போல் விளங்குகிற இந்தக் காட்டைப் பாரும். இதற்கு மதங்க வனம் என்று பெயர். இக்காட்டில்தான் சுத்தாத்துமாக்களாகிய எனது குரவர்கள் தங்கள் தேகத்தை மந்திரங்களினால் மந்திரமாகச் சம்ஸ்காரம் பண்ணி ஓமாக்கினியில் ஆஹுதி செய்தார்கள். இந்த வேதிகையின் மேல்தான் அவர்கள் வறி நடுங்குகின்ற கைகளினால் தேவர்களுக்குப் புஷ்பாஞ்சலி செய்வது. ஓ ரகுகுலோத்தம, இதோபாரும், இந்த ஒப்பில்லாத அழகிய வேதிகை அவர்களுடைய தவத்தின் மகிமையால் இன்னும் ஒளி

கான்றுகொண்டு நிற்கின்றது. இதோபாரும், இவ்விடத்தில்தான் ஏழுகடல்களும் விரதங்களினால் தேகம் இளைத்து இயங்கச் சத்தியற்றிருந்த அவர்கள் நினைத்தபோது வந்து தோன்றியது. அவர்கள நீராடிவிட்டு இந்த மரங்களில் தூக்கின மரவுரிகள் இன்னும் உலரவில்லை. அவர்கள் தேவபூசை செய்த நீலோற்பல மலர்கள்கூட இன்னும் வாடவில்லை. நீங்கள் இந்தக்காடு முழுதையும் கண்டு கேட்கவேண்டியவைக ளெல்லாவற்றையும் கேட்டுவிட்டீர்கள். இனி உமது அனுமதிப்படி இத்தேகத்தை நீக்கிவிட்டு இவ்வாச்சிரமத்துக் குடையோர்களும் சுத்தாத்துமாக்களுமாகிய நான் தொண்டு செய்துவந்த முனிவர்களுடைய சன்னிதிக்குப் போக விரும்புகிறேன்" என்றாள். அந்தத் தவமூதாட்டி சொல்லியவற்றையெல்லாம் இராமர் லக்ஷ்மணரோடு கேட்டு மிக்க சந்தோஷமடைந்து "இது ஆச்சரியம்!" என்றுசொல்லி மிக்க தவத்தினையுடைய சவரியை நோக்கி "மாதே, நீ என்னைப் பூசை செய்துவிட்டாய். இனி நீ உன் விருப்பத்தின்படி சுகமாகச் செல்லலாம்" என்றார். இராமர் அவ்வாறு அநுமதி கொடுக்க ஜடை தரித்து மரவுரியும மான்தோலும் உடுத்து நின்ற சவரி தீயில் குதித்து அக்கினிப்பிழம்புபோல ஆகாயத்தில் எழுந்தாள். அவள் திவ்விய ஆபரணங்களணிந்து திவ்விய மலர்மாலை புனைந்து சந்தனம்பூசி திவ்வியவஸ்திரந் தரித்து மிக அழகாக விளங்கி மின்னற்கொடிபோல அவ்விடத்தை விளக்கஞ்செய்தாள். சவரி தனது தவத்தின் மகிமையால் புண்ணியாத்துமாக்களாகிய தனது ஆசிரியர்கள் வசித்த புத்தேளுலகம் புகுந்தாள்.

எழுபத்தைந்தாஞ்சருக்கம்.

இராமர் பம்பையை அடைந்தது.

சவரி தனது தவத்தின் மகிமையால் துறக்கமடைந்த பின் இராமர் தமது தம்பி லக்ஷ்மணரோடு அந்தப் பெரிய முனிவர்களின் தபோமகிமையைப்பற்றி ஆலோசித்தார். அப்பெரியோர்களுடைய பெருமையைப்பற்றித் தருமாத்துமாவாகிய இராமர் தம்மனதநுள் சிந்தித்துத் தம்மாட்டன்புள்ளவரும் தமது நன்மைக்கே பாடுபடுபவருமான லக்ஷ்மணரைப் பார்த்து "தம்பி, மானும் புலியும ஒன்றுடன் ஒன்று நட்புக்கொண்டு திரிவதும் பலவகைப் பறவைகள் வாழ்வதுமாகிய இந்தப் புண்ணியாத்துமாக்களான முனிவர்களுடைய ஆச்சரியப்படத்தக்க ஆச்சிரமத்தைக் கண்டோம். இந்த ஏழுகடலின் புண்ணிய தீர்த்தத்தில் நாம ஸ்நானம்பண்ணினோம். நமது பிதிருக்களுக்குத தர்ப்பணமும் செய்தோம. ஆகையால், நமது கஷ்டங்கள நீங்கி நமக்கு நல்வாழ்வு வந்துவிட்டது. ஓ லக்ஷ்மணா, என் மனம் இப்பொழுது சந்தோஷம் நிறைந்துளது. புருஷோத்தம, நமக்கு நன்மை விரைவி லுண்டாகுமென்று எனக்குத் தோன்றுகின்றது. ஆகையால, வா, அழகிய பம்பாசரசிற்குப் போவோம். அதோ சமீபமாகவே ரிசியமூகபர்வதம தோன்றுகின்றது. அவ்விடத்தில்தான் சூரிய குமாரனான சுக்கிரீவன் வாலிக்குப் பயந்து நான்கு வானரர்களுடன் வசித்துக்கொண்டிருக்கிறான். சீதையைத் தேடுவதாகிய என் கருமம் அவனாலாகவேணடியதா யிருக்கிறபடியால் வானரோத்தமனாகிய சுக்கிரீவனைச் சீக்கிரத்தில் காண நான் விரும்புகிறேன்" என்றார். இவ்வாறு சொன்ன இராம

இராமர் சுக்கிரீவனைக் காண விரும்பல.

ரைப்பார்த்து லக்ஷ்மணர் "நாம் சீக்கிரம் போவோம். என் மனமு மவ்வாறே விரைகின்றது" என்றார். பின்னர், புருஷநாயகராகிய வலிய இராமர் மதங்காச்சிரமத்தை நீங்கித் தமது தம்பியுடன் பம்பையின் கரையைச் சென்று சேர்ந்தார்.

இராமர் பம்பைக்கரை சேர்தல்.

அநேக மரங்களையும், நீர் நிலைகளையும், நான்குபக்கத்தும் பெரிய மரங்களடர்ந்ததும், புஷ்பங்கள் பொலிந்ததும், மயில் குயில் முதலிய பறவைகளொலிப்பதும், மூங்கில்கள் சடசடப்பதுமாகிய பெரிய வனங்களையுங் கடந்து துக்கப்பட்டுக்கொண்டே இராமர் பம்பைக்கரை சேர்ந்தார். குளிர்ந்த இனிய சுத்தமான நீருள்ள பம்பையைத் தூரத்திலேயே நின்று இராமர் கண்டு அங்குள்ள மதங்க சரசில் ஸ்நானம்பண்ணி யரிகரைக்கு மெதுவாக நடந்து சென்றார். அது நான்குபுறத்தும் திலகம், அசோகம், புன்னாகம், வகுளம் முதலிய மரங்கள் சூழ்ந்து, அழகிய சோலைகளையுடையதாயிருந்தது.

பம்பையின் தோற்றம்.

அதன் நீர் பளிங்குபோல் நிர்மலமாயும் கரை அழகாக விளங்கும் மணல் பரந்துமிருந்தது. அது மீன்களும் ஆமைகளும் செறிந்து, கரையில் மரங்களடர்ந்து, தோழிகள்போல் கொடிகளால் சூழப்பட்டு, கந்தருவர், கின்னரர், நாகர், யக்ஷர், ராக்ஷசர் வந்து நீராடுவதாயிருந்தது. அது பல்வகை மரங்களும் கொடிகளும் சூழ்ந்து குளிர்ந்த நீரையுடையதாய் மிக வழகாக விளங்கிற்று. அது சிலவிடம் அரக்காம்பல் செறிந்து சிவப்பாயும், சிலவிடம் குமுதமலர்சேர்ந்து வெண்மையாயும், சிலவிடம் நீலோற்பலம் படர்ந்து நீலமாயும் அழகிய சித்திராசனம்போன்றிருந்தது. அது வெண்டாமரைகளும் செந்தாமரைகளும் செறிந்து, பூத்துவிளங்காநின்ற மாஞ்சோலை சூழ்ந்து, மயில்களொலிப்பதாய் விளங்கியது. திலகம், எலுமிச்சை, அத்தி, வெட்பாலை, கரவீரம், புன்னைகம். மல்லிகை, முல்லை, கொச்சி, அசோகம், ஏழி,

லைம்பாலை, தாழை முதலிய மரங்களால் அலங்கரிக்கப்பட்டுக் கோலஞ்செய்யப்பட்ட பம்பையைத் தசரதகுமாரரான இராமர் பார்த்துப் புலம்பி லக்ஷ்மணரோடு "கவந்தன் சொன்னபடி இதன் கரையில் பல தாதுக்களையுடையதும் பல்வகை வர்ணங்களையுடைய பூமரங்கள் சூழ்ந்ததுமாகிய ரிசியமூக பருவதம் அதோ நிற்கிறது. மகாத்துமாவான ரிக்ஷராஜசின் குமாரனாகிய சுக்கிரீவனென்னும் புகழ்பெற்ற வானரத்தலைவன் அங்கேதான் வசிக்கின்றான். புருஷோத்தம, நீ அவனிடம் போய்வா" என்று சொன்னா. அவர் மறுபடியும் மெய் வீரனாகிய லக்ஷ்மணரைநோக்கி, இராச்சியத்தை யிழந்தும் சீதையை யிழந்தும் பரிதபிக்கும் நான் என் உயிராகிய சீதையின்றி எவ்வாறு உயிருடன் இருப்பேன்" என்றார். இவ்வாறு லக்ஷ்மணரிடம் சொல்லிவிட்டு ரகுகுலோத்தமர் சோகத்தாலும் துக்கத்தாலும் வருந்திக் காமத்தால் பீடிக்கப்பட்டுக் காடுமலைகளைப் பார்த்துக்கொண்டே மெதுவாகச் சென்று நான்குபுறத்தும் அழகிய சோலைகள் சூழ்ந்து பல்வகைப் பறவைக்கூட்டங்கள் நிறைந்துள்ள பம்பையை யடைந்தார்.

இராமர் லக்ஷ்மணரைச் சுக்கிரீவனிடம் போ எனல்.



ஆரணியகாண்டம்

முற்றிற்று.

